Registered as a News Paper in Ceylon

★ ★

விலை: சதம் 15

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



... கோப்பரேஷன்

ஈழநாடு
EELA NADU
தேசிய தினசரி

காது கேட்க
உதவும் கருவிகளுக்கு
( Hearing Aids )
சீடில்ஸ்
(யாழ்ப்பாணம்) லிமிட்டெட்
SIEDLES (JAFFNA) Ltd.
122; காங்கேசன்துறை வீதி;
யாழ்ப்பாணம்.
போன்: 507

மலர் 13 மாசி 30 முஹறம் 16 (14—3—71) ஞாயிற்றுக்கிழமை இதழ் 32

# நிஜலிங்கப்பா மாநிலத்தில் இந்திராவுக்கு பெருவெற்றி!

## மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி

### செழியன், மாறன், காமராஜர், வெற்றி

புதுடில்லி, மார்ச் 13

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் இந்தியாவில் ஆட்சியை அமைப்பதற்கான பலத்தை இந்திரா காங்கிரஸ் பெறுவதற்கு அது இன்னமும் சரு சில ஸ்தானங்களையே கைப்பற்ற வேண்டுமென அதிகாரபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டில் 24 லோக்சபா தொகுதிகளில் போட்டியிட்ட தி. மு. க. 23 தொகுதிகளில் வெற்றிபெற்றிருக்கிறது. காமராஜரின் நாகர்கோவிலில் மட்டுமே தோற்றுப்போய்விட்டது இரா.செழியன், மாறன், காமராஜர் ஆகியோர் வெற்றிபெற்றிருக்கின்றனர்.

திருத்தணித் தொகுதியிலிருந்து முன்னாள் அமைச்சர் ஒ வி அழகேசன், ஜகஜீவன் ராம் தலைமைக்காங்கிரசின் தமிழ் நாட்டுக்கிளைத்தலைவர் ஆர் வி சுவாமிநாதன், கோயம்புத்தூர் தொகுதியிலிருந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கே. பாலதண்டாயுதமும் திருச்சியிலிருந்து கல்யாணசிந்தரமும் தெரிவு செய்யப்பட்டனர், நாஞ்சில் மனோகரன், சிட்டிபாபு, ஆகியோரும் வெற்றி பெற்றனர்

மதுரைத் தொகுதியில் போட்டியிட்ட மாக்ஸீய கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர்களில் ஒருவரான பி இராமமூர்த்தி ஜாமீன் தொகையையிழந்தார்

மைசூர் மாநிலத்தில் லோக்சபா தொகுதிகள் அனைத்தையுமே இந்திரா காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது. மைசூர்மாநிலம் நிஜலிங்கப்பாவின் மாநிலம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தலில் இதுவரை வந்த முடிவுகளின்படி மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி 78 இந்திரா காங்கிரஸ்கட்சி 82 ஸ்தானங்களைப் பெற்றுள்ளன.

இந்திரா காங்கிரஸ் மைசூர் மாகாணத்தில் லோக்சபா தொகுதிகள் அனைத்தையுமே கைப்பற்றியிருக்கிறது வேறெந்த

(8-ம பக்கம் பார்க்க)

## கருணாநிதி, இந்திராவுக்கு செல்வா வாழ்த்து!

கொழும்பு,சனி

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிகுறித்து இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் தமது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார். திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் திரு மு க கருணாநிதிக்கு அனுப்பிவைத்துள்ள தந்தியொன்றில், தங்கள் கழகத்தின் வெற்றிகுறித்து எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள். நீண்ட காலம் தமிழ்நாட்டிற்குபணி செய்வீர்கள் எனவாழ்த்துகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

திருமதி இந்திரா காந்திக்கும் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் வாழ்த்துச் செய்தியொன்றைத் தந்தி மூலம் அனுப்பிவைத்துள்ளார்

துரையப்பா கார் சம்பவம்

## சில அரசியல் கட்சி பிரமுகர்களிடமும் வாக்குமூலம்

யாழ்ப்பாணம்,ஞாயிறு

அல்பிரட் துரையப்பாவின் கார் வெடிகுண்டினால் தகர்க்கப்பட்டது சம்பந்தமாக பொலிஸார் யாழ்ப்பாணத்தை சேர்ந்த டாக்ஸி ஒன்றை தேடிவருகின்றார்கள்

நேற்றுக் காலை பொலிஸ் படப்பிடிப்பாளர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சென்று பல கோணங்களில் சேதமடைந்த காரை படம் பிடித்தனர். யாழ்ப்பாணம் பொலிஸ் கோஷ்டியினர் இச்சம்பவம் சம்பந்தமாக மேலும் விசாரணை செய்து வருகின்றார்கள்.

துரையப்பாவின் கார் வெடிவைத்துத்தகர்க்கப்பட்டது சம்பந்தமாகச் சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்ட இளைஞன் ஒருவன் பொலிசாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தைத் தொடர்ந்து அரசியல் கட்சிப்பிரமுகர்களையும் பொலிசார் விசாரணை செய்து வாக்குமூலம்பெற்றதாக அறியப்

(8ம் பக்கம் பார்க்க)

## லோகசபை கட்சி நிலவரம்

கடைசிப்பார்வை

| | |
|---|---|
| மொத்தஸ்தானம் | 518 |
| வெளிவந்த முடிவுகள் | 470 |
| இந்திரா காங்கிரஸ் | 336 |
| காமராஜ் காங்கிரஸ் | 16 |
| தி. மு. க. | 22 |
| ஜனசங் | 21 |
| சுதந்திரா | 06 |
| இ .கம்யூனிஸ்ட் | 18 |
| பிரஜா சோஷலிஸ்ட் | 01 |
| சுயேச்சை | 33 |
| முஸ்லிம்லீக் | 03 |
| மாக்ஸிய கம்யூ | 08 |
| பாரதகிராந்தி | 03 |
| சம்யுக் சோஷ | 03 |

## கையெழுத்து மோசடி வழக்கு; சுப்பிரீம் கோர்ட்டுக்கு பாரம்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

செனட்டர் நடராசா மீதான கையெழுத்து மோசடி வழக்கு நேற்று உயர் நீதிமன்றத்திற்குபாரப்படுத்தப்பட்டது. இவ்வழக்கு விசாரணை முடிவில் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. கொல்வின் மெண்டிஸ் உயர் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தினார்.

இவ்வழக்கில் நியமனத்தினத்தன்று, பத்திரத்தில், எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் கையெழுத்தை செனட்டர் எஸ் நடராசா வைத்ததாக குற்றம் சாட்டப் பட்டிருந்தது

எதிரி சார்பில் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம், புறக்டர் ஆர். என். சிவப்பிரகாசம், புறக்டர் வி. ஏ. பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் அட்வகேட் ஸி. சுந்தரலிங்கம் ஆஜரானார்.

விசாரணையை பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

## 'யாழ்தேவி' தீ விபத்து நாசவேலையா; தற்செயல் விபத்தா? பொலிஸ் விசாரணை

வாழ்ப்பாணம்,ஞாயிறு

நேற்று முன்தினமிரவு கோண்டாவிலுக்கருகில் 'யாழ்தேவி' ரயிலின பிரயாணிகள் பெட்டி யொன்று தீப்பிடித்து எரிந்தது சம்பந்தமாகப் பொலிசார தீவிர விசாரணையிலீடுபட்டுள்ளனர்.

ரயில்பெட்டி தீப்பிடித்ததற்கு நாசவேலையும் காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகம்தங்களுக்கு இல்லாமலில்லையென்று உயர்தர பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வந்த இரசாயனப் பரிசோதனை நிபுணரும் தீப்பிடித்து முற்றாக எரிந்துபோன பிரயாணிகள் பெட்டியைப் பரிசோதனை செய்தார்.

தீப்பிடித்த ... மட்டுமே இருந்ததாகக் கூறப்படுகிறது.

ரயில்பெட்டி தீப்பிடித்ததும் காரைக்காடுப் பகுதியிலுள்ள பொதுமக்கள் வாளிகளில் தண்ணீருடன் ஓடிவந்து தீயை அணைப்பதற்குப் பெரும் முயற்சி செய்தனர் ஆயினும் அவர்களால் தீயை அணைக்க முடியாதபடி தீ சுவாலைவிட்டு எரியத் தொடங்கி முற்றாகச் சாம்பரானது

யாழ்ப்பாணத்தில் தீயணைப்புப்படையொன்றிருக்க வேண்டியதன் அவசியத்தை இதுபோன்ற சமயங்களில் தான் உணரமுடிகிறது என்று பொலிஸ் அதிகாரியொருவர்தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரி விளம்பரம்**

**தேவை**
அச்சுக்கூடம் குத்தகைக்குத் தேவை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 2887 'ஈழநாடு' மேற்பார்த்து யாழ்ப்பாணம் 2887

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி நடித்த
**பெற்றால்தான் பிள்ளையா**

**நாகம்ஸ் சினிமா**
கன்னுகம்
தினசரி 6-30 9-30
போயா நாட்கள் 2-30
எம். ஜி. ஆர். - ராஜகுமாரி நடித்த
**குலேபகாவலி**

REGAL - Jaffna
Daily 3 shows
Poya days 4 Shows
Peter O' Toole
Katharine Hepburn
in
THE LION IN WINTER

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
நாகேஸ்வாரராவ் - சாவித்திரி நடித்த
**மஞ்சள் மகிமை**

MANOHARA
Jaffna
Daily 4-45, 7-00&9-45p.m.
Poya days 4 shows
Kyle Johnson - Alex Clarke
in
" THE LEARNING TREE "
(Technicolor - Panavision)

கடைசி வாரம்
**வின்ஸர்** [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - சோ நடித்த ஜெமினியின்
**விளையாட்டுப் பிள்ளை**

**ராணி** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேசன் ஜெயலலிதா நடித்த
**எங்கிருந்தோ வந்தாள்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி முத்துராமன் - நிர்மலா நடித்த
**வீட்டுக்கு வீடு**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
ராமராவ் — சிவகுமார் நடித்த
**மாய மோதிரம்**

கெப்பிட்டல் (கொழும்பு)
**சிவாஜி**
**காஞ்சனா**
எம். என். நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர், நடித்த





**சி வ ந் த ம ண்**


## காலிமாவட்ட பிக்குகள் வற்புறுத்து

# 'பௌத்தமே அரச மதம்! பௌத்தர் ஒருவரே தலைவர்

## சிங்களம் அரசகரும மொழியாகவேண்டும்'

(காலிநிருபர் எஸ். கே. ஹமகே)

0 பௌத்தம் அரசமதம் 0 சிங்களம் நாட்டின் அரசகருமமொழி 0 பௌத்தர் ஸ்ரீலங்கா குடியரசின் தலைவர்.

பெருந் தொகையான பௌத்த பிக்குகள் கூடியிருந்த கூட்டமொன்றில் மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. காலி வித்யாலோகா பிரிவேனா மண்டபத்தில் காலி மாவட்ட பௌத்த பிக்குகள் கூடி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

வண நெலுவ ஸ்ரீ குணவந்தா நாயக்கா தேரோ தலைமையில் நடந்த இக் கூட்டத்தை காலி மாவட்ட 26 நாயக்க தேரோக்களும் மற்றும் பௌத்த பிக்குகளும் புதிய குடியரசு அமைப்பு சம்பந்தமாக ஆராய்வதற்காக கூட்டியிருந்தார்கள்.

### தீர்மானங்கள்

பௌத்தத்தை ஸ்ரீலங்கா குடியரசின் அரச மதமாக்க வேண்டுமென்றும், சிங்கள மொழியே நாட்டின் ஒரே அரசகரும மொழியாக்கப்பட வேண்டுமென்றும், பௌத்தர் ஒருவரே ஸ்ரீலங்கா குடியரசின் தலைவராக வேண்டுமென்றும், 1815ம் ஆண்டு செய்யப்பட்ட கண்டிய ஒப்பந்தத்தின் 5ம் பிரிவு புதிய அரசியல் சாசனத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் கோரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கையை பூரணத்துவமிக்க சுதந்திரமான குடியரசு நாடாக தனது தனி வழியில் பிரகடனம் செய்ய ஐக்கிய முன்னணி எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

வண ஞானஹம சரணகர நாயக்கதேரோ இக் கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது: "இந்நாட்டில் பௌத்தம் அரசமதமாக்கப்படுவதை ஒரு சிலரே எதிர்க்கின்றனர். அவர்களுடைய வாதம் வேடிக்கையானதாக இருக்கின்றது. பௌத்தம் இந்நாட்டின் அரசமதமாக்கப்பட்டு, அதற்குரிய தனி இடத்தில் வைக்கப்பட்டு மீண்டும் புத்துயிர் பெற்று வாழவேண்டும்".

வண ஞானபின்னுல்வ புன்னகரநாயக்க தேரே பேசுகையில் இப்போது பௌத்த குருமார்கள் மௌனம் சாதித்தால் அரசியலமைப்பில் பின்னர் மாற்றம் செய்ய முடியாது போய்விடுமென்றும் பௌத்த பிக்குகள் இப்போதே ஒன்று கூடி பௌத்தத்தை அரசமதமாக்கவேண்டுமெனவும் சிங்களத்தை அரசகரும மொழியாக்க வேண்டுமெனவும் கோரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

அக்குரட்டிய வண அமரவன்ஸ நாயக்கதேரோ பேசுகையில் எமது கோரிக்கைகள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிரானவையல்லவென்றும் ஆனாலும் நாம் நமது கடமையைச் செய்யவேண்டியது அவசியமென்றும் கூறினார்.

கடந்த 250 ஆண்டுகாலமாக நாட்டின் ஆட்சிக்கு ஆலோசகர்களாக பௌத்த குருமார்கள் இருந்துவந்திருக்கிறார்கள் என்பதை அவர் நினைவூட்டினார்.

மற்றும் மூன்று பௌத்த பிக்குகளும் இக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்.

## 'விளையாட்டு உறவையும் ஏற்படுத்தும்'

நாவலப்பிட்டி, சனி

"விளையாட்டு உடலுக்கும் உள்ளத்திற்கும் மாத்திரம் தெம்பை ஏற்படுத்தவில்லை அது உறவையும் ஏற்படுத்துகின்றது இனமத பேதம் நீக்கும் ஒரே சாதனம் விளையாட்டுத்தான். விளையாட்டுக்குக் குறிப்பாகப் பெண்களின் விளையாட்டுக்கு ஆதரவு குறைவு அப்படியான சூழ்நிலையிலும் கூட தொடர்ந்தும் போட்டிகளை நடாத்தும் நாவலப்பிடி மகளிர் கல் மத்தியமாகாணத்திற்கே உதாரணமாக விளங்குவது பெருமைப்படத்தக்க செயலாகும்"

டாக்டர் சுப்பிரமணியம் கேடயத்திற்காக நடாத்தப்பட்ட சுற்றுக்கேடய வலைப்பந்தாட்ட பரிசளிப்பு வைபவத்தின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மகளிர் மகா வித்தியாலய அதிபர் திருமதி எஸ். விஜேதுங்க பேசுகையில் குறிப்பிட்டார்.

விளையாட்டுப் பகுதி உத்தியோகஸ்தர் திரு. ஜயசுந்தரா திருமதி இலங்கைநாயகம் ஆகியோரும் பேசினர். வலைப்பந்தாட்டச் சங்க செயலாளர் திருமதி பிரகஸ்பதி நன்றி உரை நிகழ்த்தினார்.

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத் தபால் உத்தியோகத்தர்களுக்கும், தொலைபேசி இலாகா உத்தியோகத்தர்களுக்குமிடையிலான மென்பந்து கிரிக்கெட் ஆட்டமொன்று இம் மாதம் 18ந் திகதி மாலை யாழ்ப்பாணக் கோட்டை மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

## பப்படம் உற்பத்தியாளர் பாதிப்பு

நீர்கொழும்பு, சனி

பப்படம் உற்பத்திக்குத் தேவையான பிரதான மூலப்பொருளான உழுந்துக்குத் தற்போது நாட்டின் பல பகுதிகளிலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பப்படம் உற்பத்தி தடைப்பட்டுள்ளதோடு இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உழுந்து இறக்குமதி செய்பவர் பலரது பர்மிட்டுகளை அரசாங்கம் ரத்துச் செய்ததினாலேயே உழுந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இப்பகுதியில் பப்படம் உற்பத்தி [illegible] தமிழர்கள் இதனால் வேலையின்றிக் கஷ்டப்படுகிறார்கள்.

## படகுப்பயணம் தாமதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கேரதீவிலிருந்து சங்குப்பிட்டிக்கு செல்லும் படகொன்றில் சுமார் 75 பிரயாணிகள் ஏறிக்கொண்டதால் தண்டேல் படகை செலுத்த மறுத்துவிட்டார். இதனால் பிரயாணிகள் சுமார் இதனால் பிரயாணிகள் சுமார் 1 மணிநேரம் தாமதிக்க நேரிட்டது.

மற்றொரு படகு அங்கு வந்தபின்னர் பாதிப்பேரி அப்படகில் ஏறிக்கொண்டனர். அதன்பின்னரே தண்டேல் படகை செலுத்தினார்.

படகு தாமதிக்கப்பட்டதால் இணைப்பு பஸ்சேவையும் தாமதிக்கப்பட்டதாகவும் இதனால் பெரும் கஷ்டப்பட்டதாகவும் பிரயாணியொருவர் தெரிவித்தார்.

கேரதீவு சங்குப்பிட்டி பாதையில் வாகனங்கள் ஒழுங்காக முறைப்படி ஏற்றப்பட்டுவருவது வழக்கமென்றும் சில அரசாங்க ஊழியர்கள் வழக்கத்திற்கு மாறாக தங்கள் வாகனத்தை முதலில் பாதையில் ஏற்றிவிடுவதால் பிரயாணிகள் கஷ்டப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 32 ஆண்டு ஆசிரியர் சேவை

தாவடி, சனி

"அறிவுப் பயிருக்கு வித்திடுபவர்கள் ஆசிரியர்கள் அவர்கள் சமுதாயத்தின் திடுவிளக்காய் நல்வழியெனும் ஒளியைக் கொடுப்பவர்கள் ஆசிரியர்களை மாணவர்கள் போற்றுவார்களேயானால் அறிவுப் பயிர் தானாகவே வளரும் பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர் முப்பத்திரண்டாண்டுகள் ஆசிரியப் பணி புரிந்த திரு. கணபதிப்பிள்ளை அன்னாருடைய சேவையை நாம் பாராட்டுதல் சிறப்பு."

இவ்வாறு இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. எஸ். கணபதிப்பிள்ளையின் சேவை நலன்பாராட்டு விழாவில் உரையாற்றிய தலைமையாசிரியர் பண்டிதர். திரு. இ. இராசலிங்கம் கூறினார்.

உடுவில் வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ். இராசாவின் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் திரு. க. கதிரவேல் திரு. வை. கதிர்காமநாதன் உட்படப் பல ஆசிரியர்களும் பாராட்டிப் பேசினர் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இளைப்பாறிய திரு. எஸ். கணபதிப்பிள்ளை ஆசிரியர் பதிலுரை கூறினார்.

## வர்த்தக ஆசிரியர் கூட்டம்

பாண்டிருப்பு, சனி

கிழக்கிலங்கை வர்த்தக ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டம் கல்முனை பாத்திமா கல்லூரி கிளெனி மண்டபத்தில் சங்கத் தலைவர் ஜனாப் உதுமாலெப்பை தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டது. செயலாளர் திரு. தேவநாயகம் நன்றியுரை கூறினார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# லோகசபையில் தி. மு. கழகம் 2-வது பெரும்பான்மை கட்சி!

## மைசூரில் இந்திராவுக்கு அமோக வெற்றி

புதுடில்லி, மார்ச் 13

தமிழ்நாட்டில் லோக சபைத் தொகுதிகள் 24க்குப் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக்கழகம் 23 தொகுதிகளில் வெற்றி பெற்றிருப்பதாக அதிகார பூர்வமற்ற செய்திகளிலிருந்து தெரியவருகின்றது. இன்றுகாலையில் கிடைத்த தகவல்களின்படி இன்னமும் தபால் மூலமான வாக்குகளே எண்ணப்படவேண்டியிருந்தன. நாகர்கோயில் தொகுதியில் போட்டியிட்ட நிஜலிங்கப்பா காங்கிரஸ் தலைவர் திரு. கே. காமராஜ் ஒருலட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளால் வெற்றிபெற்றிருப்பதாகக்கூறப்பட்டது.

தமிழ்நாட்டில் சட்ட சபைத் தொகுதிகளில் போட்டியிட்ட 256 பேர் தமது கட்டுப் பணங்களை இழந்துள்ளனர். இவர்களில் 210 பேர் சுயேச்சைகள், 30 பேர் மார்க்ஸீட கம்யூனிஸ்ட்டுகள் 5 பேர் ஜனசங்கத்தைச் சேர்ந்தவர்கள் திரு மு. கழகத்தைச்சேர்ந்த ஒருவரும் ஜாமீன் இழந்தார்.

### மேற்கு வங்கம்

மேற்கு வங்காளத்திலிருந்து இன்றுகாலை கிடைத்த செய்திகளின்படி மார்க்ஸீய கம்யூனிஸ்ட்டுகள் இந்திரா காங்கிரஸ் கட்சியைவிட சற்றுமுன்னணியில் நிற்கிறார்கள்.

முன்னாள் முதலமைச்சர் திரு அ. அஜாய் குமார் முகர்ஜியின் பாங்களா காங்கிரஸ் பல இடங்களில் தோட்டைவிட்டு இரண்டு இடங்களை மட்டுமேபெற்றிருந்தது. காலையில் வெளியான 146 முடிவுகளில் மார்க்ஸீய கம்யூனிஸ்ட்டுகள் 59 இடங்களையும் இந்திரா காங்கிரஸ் 54 இடங்களையும் கம்யூனிஸ்ட்டுகள் 8 இடங்களையும் முஸ்லிம் லீக் மூன்று இடங்களையும் பெற்றிருந்தன

ஒரிஸாவில் இன்று அறிவிக்கப்பட்ட 113 சட்ட சபை முடிவுகளில் 48 இடங்களை இந்திரா காங்கிரஸ் பெற்றிருந்தது. சுதந்திரா கட்சி 29 இடங்களையும் உட்கல காங்கிரஸ் 22 இடங்களையும் கைப்பற்றியிருந்தன.

### மைசூரில் இந்திராவுக்கு அமோகவெற்றி

மைசூரில் லோகசபைத் தொகுதிகள் பலவற்றிலும் இந்திராகாங்கிரஸ் அமோக வெற்றி பெற்றிருக்கின்றது. இது காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பாவின் சொந்த மாநிலமாகும். இன்று காலை முடிவுகள் அறிவிக்கப்பட்ட 27 இடங்களையும் இந்திரா காங்கிரஸ்கட்சியே கைப்பற்றியுள்ளது. நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியின் முக்கியபிரமுகரான திரு. பூனக்கா மல்களுர் தொகுதியில் இந்திரா காங்கிரஸிடம் தோல்வியுற்ருர்.

இதுவரை லோகசபைக்கான தேர்தல் முடிவுகளின் படி திராவிட முன்னேற்றக் கழகமே மத்திய ஆட்சிமன்றத்தில் இரண்டாவது பெரும்பான்மை கட்சியாக விளங்கும் என்று கருதப்படுகின்றது.

### தமிழ்நாடுசட்டசபையில் 5 பெண்கள்

சென்னை, மார்ச் 13

புதிய தமிழ்நாடு சட்ட சபையில் 5 பெண்கள் இடம் பெறுகின்றனர். சென்ற முறையில் சட்ட சபையில் 4 பெண்கள் இடம்பெற்றிருந்தனர்.

இம்முறை 15 பெண்கள் தேர்தலில் போட்டியிட்டனர். தி. மு. கவைச் சேர்ந்த மூன்று பெண்களும், நிஜலிங்கப்பா காங்கிரஸைச்சேர்ந்த 2 பெண்களுமே இந்த ஐந்து உறுப்பினர்களாவர்

### அமெரிக்க தூதரகம் உதவும்

கோட்டை, சனி

இம்மாதம் 6ம் திகதிநடைபெற்ற அமெரிக்க தூதரகதாக்குதலின்போது கத்திக்குத்துக்குப் பலியான பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ரி ஜி கருணரத்ன வின் மனைவி திருமதி ஹில்டா கருணரத்னவுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதாக அமெரிக்க தூதரகம் வாக்குறுதியளித்துள்ளது.

......

### தாக்குதல் சம்பவம் மூவருக்கு காயம்

யாழ்ப்பாணம், சனி

வேலணையில் நடந்தபயங்கர தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த மூவர் நேற்று யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முருகேசுகுமாரேசு, இளைய தம்பி வேலாயுதபிள்ளை, செல்லத்துரை சாந்தலிங்கம் ஆகியமூவருமே பலத்த வெட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள நபர்களாகும்.

இருவருக்குகைகளிலும்ஒருவருக்கு தலையிலும் பலத்த காயமேற்பட்டுள்ளது.

இச் சம்பவம் பற்றி பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

துருக்கியில்

### ராணுவ பயமுறுத்தல்: அரசு ராஜினமா

அங்காரா, மார்ச் 13

துருக்கியில் ராணுவ பயமுறுத்தலையடுத்து அந்த நாட்டு அரசாங்கம் ராஜினமாச் செய்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தீர்க்கவும் பொருளாதார அபிவிருத்திக்கும் வழி செய்யவும் தகுதியான அரசாங்கம்பதவிக்கு வருவதற்கு வழிவிடும் வகையில் அரசாங்கம ராஜினமா செய்யவேண்டும் என்றும் இல்லையெனில் ஆட்சியைக் கைப்பற்றப் போவதாகவும் ராணுவம் எச்சரிக்கை எடுத்திருந்தது. இதனையடுத்து பிரதம மந்திரி சுலைமான் டெமிரல் தமது அரசின் ராஜினமாவைச் சமர்ப்பித்துள்ளார்.

அரசின் ராஜினமாவையடுத்து ஜனதிபதி ராணுவத் தலைவர்களுடன் ஆலோசனை கலந்து வருகிருர்.

மேற்காஸியாவில்

### அமைதிப்படையில் சேர சோவியத் விருப்பம்?

வாஷிங்டன், மார்ச் 13

மேற்காஸியாவில் அமைதியைப் பாதுகாக்கும் படையில் பணியாற்ற சோவியத் யூனியனும் விரும்புகின்றதாம்.

மேற்காஸியாவில் அமைதியை பாதுகாப்பதற்காக ஐ.நா. படையொன்றைநிறுவிப் பணியாற்ற சோவியத் யூனியனையும் அழைத்தார். அந்த நாடு அதை ஏற்றுக்கொள்ளும் என்று தமக்குத் தெரிவதாக அமெரிக்க செனட்டரான புல்பிரைத் தெரிவித்திருக்கிருர்.

சைஞய் பகுதியில் கலப்பு படையொன்று அமைதியைப் பராமரிக்க நிறுவப்பட வேண்டும் என்றும் இதில் இஸ்ரேலியரும் எகிப்தியரும் பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் இஸ்ரேலிய பிரதம மந்திரி திருமதி கோல்டாமெயர் கருத்து வெளியிட்டிருக்கின்ருர்.

### பிரி விஞ்ஞானிக்கு அமெரிக்க பரிசு

லண்டன், மார்ச் 13

காரிய நூலிழையைக் கண்டு பிடிப்பதில் பெரும் பங்கு கொண்ட பிரிட்டிஷ் விஞ்ஞானிக்கு அமெரிக்க பரிசு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் ரோயல் விமான ஸ்தாபனத்தில் ஓர் சிரேஷ்ட விஞ்ஞானியாகக் கடமையாற்றும் திரு. வில்லியம் வாட்டுக்கு அமெரிக்க காரியக் கமிட்டி 1000 டாலர் பரிசும் கௌரவப் பதக்கமும் வழங்கியுள்ளது.

1952ம் ஆண்டிலே காரிய நூலிழைகள் பற்றி ஆராய்ச்சியை திரு. வாட் ஆரம்பித்தார். இன்று பல்வேறு உற்பத்தித் துறைகளில் குறிப்பாக மோட்டார் வாகனங்கள், படகுகள், வைத்திய உபகரணங்கள் போன்றவற்றில் காரியம் பரந்த அளவு உபயோகிக்கப்படுகிறது.

......

### இளவரசர் சாள்ஸ் படைகளில் சேர்ந்தார்

லண்டன், மார்ச் 13

பிரிட்டிஷ் சிம்மாசனத்தின் முடிக்குரிய வாரிசான வேல்ஸ் இளவரசர், இப்பொழுது ஆயுதப் படைகளில் சேர்ந்துள்ளார். சென்ற வாரம் இவர், கிரன்வெல்லிலுள்ள ரோயல் விமானப் படைக் கல்லூரிக்கு விமானமொன்றைத் தானகவே ஓட்டிச் சென்ருர்.

அடுத்து ஐந்து மாதங்களையும் இவர் ஜெட் விமானங்களை ஓட்டப் பழகுவதில் கழிப்பார். இதனையடுத்து செப்டம்பர் மாதம், ரோயல் கடற்படையில் சேருவார். டாட்மவுத் நகரிலுள்ள பிரித்தானியா கடற்படைக் கல்லூரியில் இளவரசர் சாள்ஸ் ஐந்து வருடப் பயிற்சியைப் பெறுவார்.

### வெளிநாட்டு உதவி

கோட்டை, சனி

டென்மார்க்கிலிருந்தும் பிரிட்டனிலிருந்தும் ரூபா 50 லட்சம் பெறுமதியான 595 படகு என்ஜின்களும், உதிரிப்பாகங்களும், அமெரிக்காவிலிருந்து ரூபா 19,25000 பெறுமதியான 1300 என்ஜின்களும் உதிரிப்பாகங்களும் இலங்கை கடற்ெறுழில் இலாகாவுக்கு கிடைக்கவிருக்கிறது. இதனுல் இவ் வருடம் இவ் இலாகாவுக்கு ரூபா 75,93000 பெறுமதியான உதவி கிடைக்கும் எனக்கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து 50 லட்சம் ரூபாய் பெறுமதியான டி. டி. ரியும் ஜெர்மன் ஜனநாயகக்குடியரசிலிருந்து 20 லட்சம் பெறுமதியான மருந்துவகைகளும இலங்கை சுகாதார இலாகாவுக்கு கிடைக்கவிருக்கின்றது:

—...

### தலைமை ஆசிரியராக 4,000 பேர்

கோட்டை, சனி

தலைமை ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த மொத்தம் 20,000 விண்ணப்பங்களில் 4,000 பேர் மே மாதம் 1-ம் திகதியில் நாட்டின் பல்வேறு பகுதியிலும் நியமிக்கப்படுவர். அத்துடன் 1000 மூன்ருந்தர அதிபர்களையும் கல்வி அமைச்சு நியமிக்கும் என தெரிவித்துள்ளது.

## கி. பாகிஸ்தானில் சிறைக்கைதிகள் தப்பி ஓடுகிருர்களாம்!

### சட்ட மறுப்பு காரணம்

டாக்கா, மார்ச் 13

கிழக்குப் பாகிஸ்தானில் சிறைக் கைதிகள் தப்பிச் செல்கிருர்களாம்.

இப்படித் தப்பிச்செல்ல முயன்ற ஏராளமான சிறைக் கைதிகளை ராணுவம் சுட்டுத் தள்ளியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஷேக்முஜிபுர் ரகுமான் ஆரம்பித்துள்ளசட்டமறுப்பு இயக்கத்தில் சிறைக்காவலர்களும் கலந்துகொண்டு வேலைக்கு வராமலிருப்பதால் சிறைக் கைதிகள் தப்பிச் செல்வதாகக் கூறப்படுகின்றது.

கிழக்குப் பாகிஸ்தானில் இப்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு இஸ்லாமாபாத் அரசுதான் காரணம் என்று ஷேக்முஜிபுர் ரகுமான் மீண்டும் குற்றஞ்சாட்டியிருக்கிருர். கிழக்குப் பாகிஸ்தானில் பெருமளவில் இன அழிப்பில் ஈடுபடுவதற்கு ராணுவம் ஏற்பாடு செய்து வருவதாகவும் அவர்குற்றஞ்சாட்டியிருக்கிருர்.

இதற்கிடையில் கிழக்குப் பாகிஸ்தான் நிலைமையை நேரில் பார்ப்பதற்காக அதிபர் யாஹ்யாக்கான் கிழக்குப்பாகிஸ்தானுக்கு வந்து சேர்ந்திருக்கிருர் இன்று டாக்காவுக்கு அவர்வருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

ஷேக்முஜிபுர் ரகுமானைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்த யாஹ்யாக்கான் முடிவு செய்திருக்கிருர். ராணுவத்தை வாபஸ்பெறவும், மக்கள் ஆட்சியை ஏற்படுத்தவுமான ஓர் ஒப்பந்தத்தை ஷேக்முஜிபுர் ரகுமானுடன் செய்துகொள்ள அவர் முயற்சி செய்யவிருக்கிருர் என்று கூறப்படுகின்றது

கிழக்குப் பாகிஸ்தானில் இன்று பதினெராவது நாளாக சட்டமறுப்பு இயக்கம் தொடர்ந்து நடைபெறுகின்றது. மக்கள் வேலைகளுக்குச் செல்லாமல் இருந்துவருகிருர்கள். வரிசெலுத்த மறுக்கப்படுகின்றது. அரசாங்க அலுவலகங்கள் முடங்கிக்கிடக்கின்றன. அமைதியானமுறையில் இந்தச்சட்ட மறுப்பை மேற்கொள்ளும்படி ஷேக்முஜிபுர் ரகுமான் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.

சட்ட மறுப்பில் இறங்கியுள்ள அனேகர் ராணுவத்தின் துப்பாக்கிக்குண்டுகளுக்கு பலியாகியிருப்பதாகக் கூறப்படுகின்றது என்ருலும் மறுப்பு இயக்கம் தளராமல் நடைபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நான் நம்பியிருப்பது கடவுளை மட்டுந்தான் நான் மனிதரை நம்பும் காரணமாவது எனக்கு கடவுளிடம் நம்பிக்கையிருப்பதே. — மகாத்மாகாந்தி

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 30ந் திகதி (14-3-71)

## எண்ணித் துணிக...!

"எண்ணித்துணிக கருமந் துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு" என்பது வள்ளுவர் வாக்கு. செய்யத் தக்கதைத் தான் செய்ய வேண்டுமென்பதும் வள்ளுவர் வாக்கு தமிழிலுள்ள திருக்குறளை நம் நாட்டு ஆட்சியாளர் வாசித்துத் தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும் வள்ளுவரின் குறள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் கூட மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. அதையாவது அமைச்சர்கள் சிலர் படித்தறிந்திருந்தால் நல்லது. இனிமேலும்கூடப் படித்து அறிந்து கற்றபின் நிற்க அதற்குத் தக என்ற முதுமொழியின் படி நடந்து கொள்வதும் நலமே.

55 வயதில் அரசாங்க ஊழியர்கள் ஓய்வுபெற வேண்டுமென உத்தரவிட்ட அரசாங்கம் இந்த உத்தரவின்கீழ் ஓய்வு பெற்ற ஊழியர்களை மீண்டும் சேவைக்கு அழைக்கும் புதியதொரு சுற்று நிருபத்தை அனுப்பியிருக்கிறது 55 வயதில் அரசாங்க ஊழியர் ஓய்வு பெறும் உத்தரவைப் பிறப்பித்த அதே அரசாங்கம் சில ஊழியரின் சேவை தேவைப்படுமானால் அவர்களின் சேவையை நீடிப்பதற்கு அமைச்சர்களின் விருப்பத்துக்கு விடுத்திருந்தது இதன்பின்னர் 55 வயதில் ஓய்வு பெற்ற ஊழியர்களை மீண்டும் திருப்பி எடுக்கலாம் என புதிய உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

அரசாங்க நிர்வாகம் சீராகவும் ஒழுங்காகவும் திறமையாகவும் நடைபெற ஆற்றலும் அனுபவமும் நேர்மையுமுள்ள ஊழியர்கள் தேவை, படித்து விட்டு வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டியது அவசியமே, ஆனாலும் ஆற்றலும் அனுபவமுள்ளவர்களைத் திடீரென அனுப்பி விட்டுப் புதியவர்களைக் கொண்டு நிர்வாகம் நடத்துவதென்பது சுலபமல்ல

ஏற்கனவே உத்தியோக மொழி காரணமாக ஆற்றலும் அனுபவமும் உள்ளவர்களின் சேவையை அரசாங்கம் இழந்துள்ளது. இந்நிலையில் 55 வயதில் அரசாங்க ஊழியரை ஓய்வுபெறச் செய்யும் திட்டம் கொண்டுவரப்பட்டபோதே நிலைமையைச் சிந்தித்திருக்க வேண்டும்.

உத்தியோக மொழி காரணமாக பலர் நாட்டை விட்டுச் சென்றுவிட்டனர் 55 வயது ஓய்வுத் திட்டத்தினால் ஓய்வு பெற்ற சிலர்கூட வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கின்றனர், நமது நாட்டின் துரதிர்ஷ்டம் வெளிநாடுகள் பலவற்றுக்கு அதிர்ஷ்டமாக இருக்கிறது,

ஓய்வுபெறும் திட்டத்தில் மட்டுமல்ல இதுரபல விஷயங்களிற்கூட அரசாங்கம் அவசரமுடிவை மேற்கொண்டு பின்னர் அவற்றை மாற்றிக் கொள்ள வேண்டியேற்படுகிறது.

தவறு செய்வது மனித இயல்பு, அதை உணர்ந்து திருத்திக்கொள்வது பெருந்தன்மைதான், ஆனாலும் மீண்டும் மீண்டும் தவறு செய்து அதை மீண்டும் மீண்டும் திருத்திக்கொண்டேயிருந்தால் காரியமாகுமா? இதனாலேதான் எக் காரியத்தையும் செய்ய முற்படும் போது நன்கு சிந்தித்துச் செயற்படுத்த முன்வர வேண்டும் என்று மக்கள் கூறுகிறார்கள்,

## 'இந்தப் பகுதி பிரயாணிகள் கஷ்டம் தீர சிறந்த வழி'

உரும்பராய், சனி

'யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் வரையே குறுகிய பஸ் சேவை நடத்தப்படுகிறது புத்தூர். சிறுப்பிட்டி ஆவரங்கால போன்ற இடங்களிலுள்ள பிரயாணிகள் மிகவும் கஷ்டம் அடைகின்றனர். பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரும் பஸ்களில் பருத்தித்துறை, நெல்லியடி, அச்சுவேலி முதலிய இடங்களிலேயே பஸ்களில் மக்கள் நிறைந்து விடுவதால் ஆவரங்கால புத்தூர் பகுதியைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் செல்லும் பஸ்களில் இடம்பெற முடியாது போய்விடுகிறது. இதைப்போல ஆவரங்கால் புத்தூரைச் சேர்ந்தவர்களும், புத்தூர் ஆவரங்கால் போன்ற இடங்களுக்கும் பிரயாணம் செய்பவர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து நிறைய மக்களோடு வரும் பஸ் வண்டிகளில் இடம்பெற முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இக் கஷ்டம் தீருவதற்கு யாழ்ப்பாணத்தில இருந்து ஆவரங்கால் வரை குறுகிய பஸ் சேவை ஒன்றை நடத்துவதே சிறப்பான வழியாகும்'.

வலிகாமம் கிழக்கு பஸ் பிரயாணிகள் சங்க நிர்வாக சபைக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய சங்கத்தலைவர் க. பாலசுந்தரம் தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கோண்டாவில் டிப்போவுக்குப் போகும் பஸ் வண்டிகளை உரும்பராய் சந்திவரை செல்லக் கூடியதாய் ஒழுங்கு செய்யவேண்டும் என்றும் டிப்போ பஸ்கள் யாழ்ப்பாணத்திற்கு புறப்படும் பொழுது உரும்பராய் சந்தியிலுள்ள பிரயாணிகளின் நலன்கருதி ஏற்றிச் செல்ல வேண்டும் என்று திரு அ. பஞ்சாட்சரம் கேட்டுக் கொண்டார்.

திரு வெ. கணபதிப்பிள்ளை, எஸ் முத்துலிங்கம் உட்படப் பலர் பேசியதை யடுத்து இ. போ. ச. தலைவரை கூடிய விரைவில் பேட்டி காண்பதற்கான 5 பேரை கொண்ட ஒரு குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. நீர்வேலியில் கூட்டம் நடைபெற்றது.

## பொறுப்பேற்கும்

கோட்டை, சனி

இலங்கையிலுள்ள காரியச் சுரங்கங்களைப் பொறுபேற்று சுரங்கமறுத்தலைப் மேற்கொள்ளைத் தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் திரு. பி. பி. சுபசிங்க நடவடிக்கைகள் எடுத்துள்ளார்.

# அரசியல் அமைப்பு ஓ
# உரிமை மட்டு மன்று

— செனேட்டர் நடேச

அரசியல் நிர்ணயசபை பற்றி செனேட்டர் நடேசன் கூறியதாவது:-

புதிய பாரிவிமெண்ட் சபையிலுள்ள எல்லா அங்கத்தவர்களும் ஓர் அரசியல் நிர்ணயசபையாகக் கடமையாற்றவேண்டுமென்று பிரதமர் அழைத்தார். இந்த அழைப்பு சட்டப்படி செல்லுமா?என்ற சந்தேகம் சில வட்டாரங்களில் ஏற்பட்டது. ஆகவே சில கட்சிகள் இந்த அழைப்பை ஏற்கச் சற்று தயங்கின. ஏன்தெரியுமா?

கூட்டுமுன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருதன்ப்பகுதி அடங்கியிருப்பதுபோல் தோன்றியது. ஒன்று பாரிவிமெண்டிலுள்ள கூட்டுமுன்னணி மெம்பர்கள் பின்பற்றக்கூடியதொன்றைக்களைப் பற்றியது. மற்றொன்று பாரிவிமெண்ட் சபையிடமிருந்து ஒரு புதிய கட்டளையைக் கேட்டதாகும்.

'ஒரு புதிய அரசியலமைப்பைத் தயாரித்து, அங்கீகரித்து நடாத்தி வைக்க, பாரிவிமெண்ட் மெம்பர்கள் ஒரே சமயத்தில் ஓர் அரசியல் நிர்ணய சபையாகக் கடமையாற்ற அனுமதிக்கும்படி உங்கள் உத்தரவை வேண்டுகின்றோம். இந்த அரசியல் அமைப்பு, இலங்கையை ஒரு சுதந்திரமான ஆதிபத்தியமுள்ள தனித்தியங்கும் குடியரசாக பிரகடனம் செய்யும் இதன் நோக்கம் சோஷலிஸ ஜனநாயகத்தை அடைவதே. மேலும் எல்லாப்பிரஜைகளுக்கும் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் அது பெற்றுத் தருவதாக இருக்கும்.

இப்போதுள்ள பாரிவிமெண்ட் சபைக்கும் அரசியல் நிர்ணய சபைக்கும் சம்பந்தமெதுவுமிராதென்றும் கூறப்பட்டது. அதனுல் கூட்டுமுன்னணிக் கட்சியைச் சேர்ந்த எம். பி. மார்கள் பாரிவிமெண்ட் சபையிலே தேர்தல் விஞ்ஞாபனத்தில் அடங்கியபடி கடமையாற்ற வேண்டியிருப்பினும், அவர்களை அரசியல் நிர்ணயசபை மெம்பர்கள் என்ற முறையில், அத்தேர்தல் விஞ்ஞாபனங்கட்டுப்படுத்தமுடியாது. அரசியல் அமைப்புசபையிலுள்ள எல்லாமெம்பர்களும் கட்சி முதலிய கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பொதுமக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் நாட்டின் எதிர்கால அரசியலைத் தயாரிக்கும் மிக மேலான கடமையைக் கூட்டாகச் செய்ய வேண்டியவர்களாவர். மொழி, சிறுபான்மையோர் உரிமை உள்ளிட்டு பல விஷயங்களிலும் அவர்கள் ஏற்கெனவே என்ன கருத்துக் கொண்டிருப்பினும்சரி, எல்லாப் பிரச்சினைகளையும், நீதி நேர்மையாக, நாட்டில் அமைதியும், சௌஜன்யமும் ஏற்பட உதவும் முறையில் சமரச மனப்பான்மையுடன் தீர்க்க, அச்சபை அங்கத்தினர் முற்படுவரென்றே நம்பப்பட்டது. இச்சபை கூடுகையில், பாரிவிமெண்ட் சபையிலுள்ளதுபோல் அரசாங்கக்கட்சி, எதிர்க்கட்சி என்ற வகையில் இல்லாமல் அவர்கள் தங்கள் பெயர்களின் முதல் எழுத்தின் அடிப்படையில் வரிசைக்கிரமமாக அமர வேண்டுமென்றும் யோசனை கூறப்பட்டது குறுகியகட்சிநோக்கங்கள் இன்றி பல கட்சியினரும் கலந்து உட்கார்ந்து ஒரு மேலான பொதுத் தன்மையான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியதவசியம் என்றும் உணரப்பட்டது.

ஒரு நாட்டின் அரசியல் அமைப்பைத் தயாரிப்பது ஒரு கட்சிவிஷயமல்ல. ஒவ்வொரு பொதுத்தேர்தலுக்குப் பின்னும் அதிகாரத்திலுள்ள ஒரு கட்சியானது. அரசியல் திட்டத்தை மாற்றக்கூடியதுமன்று: பொதுமக்கள் கூடியமட்டில் பொதுவாக அங்கீகரிக்கும் முறையில், எல்லாக்கட்சிக் கருத்துக்களையும்கவனித்து, இனம் சமயம், மொழி, அரசியல் கருத்துக்கள் முதலிய பற்றுகள் இன்றி ஓரளவு நிரந்தரமானதாகத் திகழ அமைக்கப்பட வேண்டியதாகும். இக்கருத்துடன்தான் உதாரணமாக சமஷ்டிக்கட்சியும், அரசியல் நிர்ணயசபையில் கலந்து கொள்ள தூண்டப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியும் கூட, அரசியல்நிர்ணயசபை சட்டப்படி கூட்டப்பட்டதாகக் கருதாவிடினும் இவ்வேளையில் கலந்து கொண்டது.

எந்த அரசியல் கட்சியும் இச்சபையின் வேலையில் சேராமல் ஒதுங்கியிருப்பின் அவ்விக கட்சிகள், மக்களின் விரோதிகள் என்று அவர்கள் மீது விஷமப்பிரசாரம்நடைபெறக்கூடும். இதனுல் நாட்டில் நெருக்கடிகள் ஏற்படலாம். இக்காரணங்களால் எல்லாக்கட்சிகளும் இதில் கூடு[...] வரவேற்கத் தக்கதே:

அரசியல்விஷய அமைச்சர், வழிகாட்டு, விஷயாலோசனைக் கமிட்டிக்கு சமர்ப்பித்துள்ள நகல்திர்மானங்களை இப்போது வெளியிட்டுள்ளார் அவ்விஷயமாக அமைச்சர் கூறியுள்ள சில கூற்றுகள் சரியானவையல்ல. இந்த அடிப்படைத்திர்மானங்கள், ஐக்கியமுன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத்தழுவியவை மந்திரிசபையின் அங்கீகாரம் பெற்றவை பென்றும் அரசாங்கத்தின் உத்தேச திர்மானங்கள் என்றும் அவர் கூறுகிறார். இத்திர்மானங்களுக்கு யாரும் திருத்தங்கள் கொண்டுவருவதாயின், அத் திருத்தங்கள், கூட்டுமுன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு மாறாக இருக்கப்படாதென்றும், அப்படி இருப்பின் அரசியல்நிர்ணய சபை அவற்றை ஒப்புக்கொள்ள முடியாதென்றும் சொல்லுகிருர் அதாவது கூட்டுமுன்னணி எம் பி மார்கள் அரசியல்நிர்ணயசபையிலே கலந்துகொள்கையில், கட்சி அங்கத்தினர் என்ற முறையிலேயே, தங்கள் கட்சியின் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்துடனேயே பணியாற்றுவர் என்று ஏற்படுகின்றது. இதிலிருந்து புதிய அரசியல் அமைப்பைத் தயாரிப்பது, ஒரு கட்சிவிஷயமாகக்கப்படுவதாக இருக்கும்.

இந்தியாவிலே அரசியல் நிர்ணயசபைகூடி இதே கடமையைச் செய்கையில் மேலான அரசியல் ஞானத்துடன் முன்னுள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால்நேரு, அச்சபை அங்கத்தவர்களுக்கு விடுத்த ஓர் அழைப்பில் கூறியதை, இச்சமயம் நினைவுகூறி ஒப்பிட்டுப்பார்க்கலாம் அவர் கூறியதாவது:

அரசியல் நிர்ணயசபை ஒரு கருத்தை மற்றவர்மீது கட்டாயமாகத் திணிப்பதற்கோ, அல்லது வாக்குவாதங்கள் செய்வதற்கோ கூட்டப்படுவதாக நானே அல்லது எனது சகாக்களோ கருதவில்லை ஒரு திருப்தியான ஐக்கிய இந்தியாவை அமைப்பதற்கு அது வழியுமல்ல. பொதுவான நல்லெண்ணத்துடன், கருத்து வேற்றுமைகளான விஷயங்களில் விட்டுக்கொடுத்து, ஒரு பொதுவான அடிப்படையைக் காணவேண்டுமென்ற ஓர் உறுதிப்பாட்டுடனேயே இச்சபையின் வேலையில் ஈடுபடுவோம். இதுவரை என்ன நடந்திருப்பினும்சரி, கடுஞ்சொற்கள் கூறப்பட்டிருப்பினும் சரி, ஒத்துழைப்பதற்கான பாதை திறந்துள்ளது. மாறுபட்ட கருத்துக்கொண்டவர்கள், சரிசமமான முறையில், நிபந்தனை எதுவுமின்றி சமபங்காளிகள்போல், இதில் ஒத்துழைக்க வேண்டுகிறோம் பொதுக்கடமையைச்செய்ய நாம் கூடும்போது, நமது தற்போதைய சங்கடங்கள் மறைந்துவிடக்கூடும்'

ஒரு நாட்டின் அரசியல் திட்டம்எதுவாயினும் அதை சமாதான முறையிலோ புரட்சி முறையிலோ மாற்ற பொதுமக்களுக்கு சட்டப்படி உரிமையுண்டு கட்சிநோக்கமின்றி பொதுமக்களின்பிரதிநிதிகளென்று விட்டுக் கொடுக்கும்மனப்பான்மையுடன் நாட்டுப் பிரச்னைகளைத் தீர்க்க முற்பட்டால், அமைதியான முறையில், அவ்விதசபைகள் மூலம்மக்கள் தங்கள் புரட்[...] உரிமையை நிறைவேற்று[...] தாகக் கூற ஓரளவு நியா[...]முண்டு.

ஆனல் இப்போது அர[...]யல் அமைப்பு அமைச்ச[...] கூறுவதென்ன? கூட்டு மு[...]ன்ணி மெம்பர்கள், அ[...] சபை மூலம் தங்கள் தே[...]தல் விஞ்ஞாபனத்தை[...] நிறைவேற்றவே உத்தேசி[...] திருப்பதாகக் கூறுவதால்[...] வேறு பல விஷயங்கள் எழு[...]கின்றன. சிறுபான்மை[...] உரிமைகளைப் பாதுகாக்க[...] சமஷ்டிக்கட்சியோ, தமிழ்[...] காங்கிரஸோ எதுவும் செய்[...]வதற்கில்லை. ஏனெனில்[...] இவ்விஷயம் பற்றி கூட்டு[...] முன்னணி ஏற்கவே தன்[...] கருத்தைவெளியிட்டுள்ளது. அக்கருத்துக்களை மாற்றமுடி[...]யாதென்றும் அமைச்சர் கூறுகின்[...]

அரசிய[...] நிர்ணய சபை மூலம் இந்நாட்டுப் பொது மக்கள், அல்லது பெரும்பாலோர் புதிய அரசியலைத் தயாரிக்கிருர்களா? என்பதைப்பற்றி செனட்டர் நடேசன் ஆராய்கையில் சென்ற பொதுத்தேர்தலில், பதிவான மொத்தவாக்குகளில், பாதிக்கும் குறைவாகவே கூட்டுமுன்னணி பெற்றுள்ளதென்றும், அரசியலைத் தயாரிப்பதற்கான கட்டளையைபொதுமக்களில் சிறுபான்மையோரே அளித்துள்ளதாகவும். மற்றக் கட்சியினர் இதுபற்றி ஒன்றும் கேட்கவில்லை என்றும், வாக்காளர் இடாப்புகளை ஒப்பிட்டுப்பார்த்தால், இந்நாட்டில் சிறுபான்மையானவாக்காளர் பெரும்பான்மை[...] ஸ்தானங்[...]ப்பெற மு[...] துள்ளதென்றும், இவர்கள் நாட்டு பொதுமக்களுக்காக அரசியலைத் தயாரிக்கும் உரிமையைப்பெறுவது தவறென்றும் எடுத்துக்கூறுகிறார். தொகுதி நிர்ணயத்தில் பல தவறுகள் இருப்பதை அவர் சுட்டிக்காட்டி இத் தவறுகளை புதிய அரசியலில் திருத்தும் உத்தேசம் அமைச்சருக்கு இல்லை என்றும் இத் தவறு காரணமாகவே, கூட்டுமுன்னணிக்கு அதிக ஸ்தானங்கள் கிடைக்க முடிந்துள்ளதென்றும் பசறை தொகுதியில் 16461 வாக்காளரே இருக்கையில் கோட்டே தொகுதியில் 68 383 வாக்காளர் இருப்பது நேர்மையற்ற ஓர் ஏற்பாடென்றும். இது பற்றி பொதுஜன வாக்கெடுப்பு எடுப்பின் எல்லா தொகுதிகளிலும் சரிசமமான வாக்காளரே இருக்க வேண்டுமென்று, மக்கள் தீர்ப்பளிப்பரென்பதில் ஐயமில்லை என்றும் கூறுகிருர்.

"மேலும் நியமன மெம்பர்களை நீக்கவேண்டுமென்று நகல் தீர்மானம் கூறுகையில், புதிய அரசியல் அமைப்பின்படி கூடும் தேசிய சபையில் இப்போதுள்ள நியமன மெம்பர்கள் நீடித்திருப்பர். இவ்விதம் நீடிப்பது பொதுமக்கள் கருத்தைநிறைவேற்றுவதாகுமா?

அரசியல் நிர்ணயசபை தயாரிக்கும் நகல் அரசியல் திட்டத்தின்மீது பொதுஜன வாக்கெடுப்பு எடுத்து, அவர்களது அங்கீகாரத்தைப்பெற வேண்டுமென்றும், இன்றேல் இந்தத் திட்டம் பொதுமக்களின் சம்மதம் பெற்றதாகாதென்[...]

ஆசிரியருக்குக் கடிதம்

## காந்தியை அழைத்தது யார்?

1927-ம் ஆண்டு மகாத்மா காந்தியை இலங்கைக்கு வரவழைத்தது யாரென்பது குறித்துச் சில தினங்களாக 'ஈழநாடு' பத்திரிகையில் வேறுபட்ட அபிப்பிராயங்கள் வெளிவந்ததைக் கவனித்தேன்.

பங்களூர் சென்று இலங்கைக்கு மகாத்மா காந்தியை வரும்படி அழைத்தது யார் என்பதை 29-11-1927-ம் தேதி யாழ்ப்பாணக்கல்லூரியில் சொற்பொழிவாற்றுகையில் அவரே குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்டதை இங்கு அவர் கூறியவாறே தருகிறேன்:

உபஅதிபராகிய உங்களையும் இக்கல்லூரியின் பழைய மாணவர்களான வரவேற்புக்குழுவின் இருகாரியதரிசிகளையும் பங்களூரில் சந்தித்ததையிட்டுநான் மகிழ்ச்சியடைகிறேன்' — 'இலங்கையில்' காந்திஜியுடன்'- மகாதேவ்தேசாய் (பக்கம் 149)

இங்கு மகாத்மா காந்தி குறிப்பிட்ட உபஅதிபர் திரு. ஜே வி. செல்லையா ஆவார் அவர் குறிப்பிட்ட காரியதரிசிகளில் ஒருவர்திரு. ஹண்டிபேரின்பநாயகம். காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு குமாரசூரியர் மற்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

[...]
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...பு ஒரு கட்சியின் ...ன்று

## ...னட்டர் நடேசன்

...ம்மக்கள் தங்கள் புரட்சி
...மையை நிறைவேற்றுவ
...க் கூற ஓரளவு நியாய
...டு.

...ஞல் இப்போது அரசி
... அமைப்பு அமைச்சர்
...வதென்ன? கூட்டு முன்
...ி மெம்பர்கள், அச
...ப மூலம் தங்கள் தேர்
... விஞ்ஞாபனத்தை
...றைவேற்றவே உத்தேசித்
...ப்பதாகக் கூறுவதால்
...் பல விஷயங்கள் எழு
...றன. சிறுபான்மை
...மைகளைப் பாதுகாக்க
...ட்டிக்கட்சியோ, தமிழ்க்
...சரஸோ எதுவும் செய்
...வில்லை. ஏனெனில்
...விஷயம் பற்றி கூட்டு
...ணி ஏற்கனவே தன்
...தைவெளியிட்டுள்ளது.
...நித்துக்களை மாற்றமுடி
...ன்றும் அமைச்சர்
...ன்று...
...சியல் நிர்ணய சபை
... இந்நாட்டுப் பொது
...ள், அக்கறை பெரும்
...ார் புதிய அரசியலைத்
...ரிக்கிருர்களா? என்
...ப்பற்றி செனட்டர்
...சன் ஆராய்கையில்
...த பொதுத்தேர்தலில்,
...ான மொத்தவாக்கு
... பாதிக்கும் குறை
...வ கூட்டுமுன்னணி
...ருள்ளதென்றும், அர
...த் தயாரிப்பதற்கான
...ளையும் பொதுமக்களின்
...ன்மையோரே அளித்
...தாகவும். மற்றக்
...பினர் இதுபற்றி ஒன்
...கேட்கவில்லை என்றும்,
...ாளர் இடைப்புகளை
...டுப்பார்த்தால், இத்
...ல் சிறுபான்மையான
...ளர் பெரும்பான்...
...ப்பெற ...
...தென்றும், இவர்கள்
... பொதுமக்களுக்காக
...லைத் தயாரிக்கும்
...மையைப்பெறுவது தகா
...ம் எடுத்துக்கூறுகி
...தொகுதி நிர்ணயத்தில்
...வறுகள் இருப்பதை
... சுட்டிக்காட்டி இத்
...ளை புதிய அரசியலில்
...ும் உத்தேசம் அமைச்
... இல்லை என்றும் இத்
... காரணமாகவே,
...முன்னணிக்கு அதிக
...ங்கள் கிடைக்க
... தென்றும்
... தொகுதியில்
... வாக்காளரே இருக்
... கோட்டே தொகுதி
...8 383 வாக்காளர்
... நேர்மையற்ற ஓர்
...டென்றும். இது
... பொதுஜன வாக்
...ு எடுப்பின் எல்லா
...திகளிலும் சரிசம
...ாக்காளரே இருக்க
...மென்று, மக்கள்
...ிப்பரென்பதில் ஐய
...ன்றும் கூறுகிருர்.
...லும் நியமன மெம்
... நீக்கவேண்டு
... நகல் தீர்
... கூறுகையில்,
...ரசியல் அமைப்பின்
...் தேசிய சபையில்
...துவின் நியமன
...களை நீடித்திருப்பர்.
...ம் நீடிப்பது பொது
... கருத்தைநிறை
...தாகுமா?
... நிர்ணயசபை
...கும் நகல் அரசியல்
...தின்மீது பொது
...க்கெடுப்பு எடுத்து,
... அங்கீகாரத்
...ற வேண்டுமென்
... இன்றேல் இத்தகைய
... பொதுமக்களின்
...பெற்றதாகாதென்

றும் அவர் வற்புறுத்துகின்ருர்.

[அரசியல் நிர்ணய சபை பற்றி செனட்டர் நடேசன் அவர்கள் கூறியுள்ள சில முக்கிய யோசனைகளில் எதிர்கால அரசியலைத் தயாரிக்கும் பணி, ஓர் அரசியல் கட்சியின் உரிமையல்லவென்றும், விட்டுக்கொடுத்த சமரசமுறையில் எதிர்கால அரசியலைத் தீர்மானிக்க வேண்டுமென்றும், இன்றேல் பொதுஜன வாக்கெடுப்புக்கு விட்டு அவர்களின் சம்மதத்தைப்பெற வேண்டுமென்றும் இக்கட்டுரையில் யோசனை கூறுகின்ருர்.]

குடிசைக்கைத்தொழில்மூலம்

## நைலோன்வலை உற்பத்தி

கோட்டை, சனி

அற்போது கடற்றொழிலாளர் மீன்பிடிப்பதற்குப்பயன்படுத்து நைலோன் வலைகளைக் குடிசைக் கைத்தொழில்மூலம் உற்பத்தி செய்ய கடற்றொழில் அமைச்சு தீர்மானிக்கிறது. பாகிஸ்தானில் மீன்பிடியாளர்களுக்குத் தேவையான நைலோன் வலைகள் யாவும் குடிசைக் கைத்தொழில் மூலமே உற்பத்தி செய்யப்படுகின்றன இதனுல் வேலை வாய்ப்பும் வருவாயும் நாட்டுக்குக் கிடைக்கிறது.

மாத்தறையில் நடைபெற்ற கடற்றொழிலாளர் மகா நாடொன்றில் உரையாற்றுகையில் கடற்றொழில் இணைக்கள அதிபர் மேற்கண்டவாறு கூறிஞர்.

அவர் மேலும் மீன்பிடித் தொழில் அபிவிருத்திபற்றிக் கூறுகையில் பின்வருமாறு கூறியதாவது:-

கடற்றொழில் அமைச்சு மீன்பிடியாளர்கள் வதியும் இடங்களில் போக்குவரத்துப் பாதைகளை அமைக்க 4 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது அத்துடன் தென்கரையோரங்களில் மீனவர்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்க பல ஏக்கர் நிலப்பரப்பையும் சுவீகரித்துள்ளது.

நிதி நருக்கடி

## சுகாதார சேவையை பாதிக்காது

கோட்டை, சனி

மக்கள் அரசாங்கத்தின் நிதி நெருக்கடி எந்தவிதத்திலும் சுகாதார சேவையைப் பாதிக்காது. நாட்டின் பல பகுதிகளிலும் சுகாதார சேவையைச் செவ்வனே நடத்தவும் சுகாதார தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்யவும் வேண்டிய நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

சுகாதார அமைச்சர் திரு. ஆரியதாசா தென்பகுதியில் பிரசவவிடுதி யொன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறிஞர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கிராமப்புறங்களின் சுகாதார நிலை சீர்கெட்டுப்போய் உள்ளது. அந்நிலையைச் சீர்திருத்தியமைத்துக் கிராமப்புற மக்களுக்குச் சிறந்த சுகாதார சேவையை அளிக்க சுகாதார அமைச்சு 5 வருட சுகாதார திட்டமொன்றைத் தயாரித்துள்ளது எனக் கூறிஞர்.

சுகாதார அமைச்சின் ஆட்சிமன்றக் காரியதரிசி திரு எம் நடராஜாவும் இவ்வைபவத்தில் உரையாற்றிஞர்.

கண்டாவளை கொலை முயற்சி வழக்கு

# 'சன்னங்கள்தைத்ததும்டிராக்டரை வேகமாக ஓட்டும்படி கூறினேன்'

## காயமடைந்த வைரமுத்து சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

2-ம் எதிரி கையில் வைத்திருந்த துவக்கை 1-ம் எதிரியிடம் கொடுத்தார். 1-ம் எதிரி எங்களை நோக்கி குறி வைத்தார். வெடிதீர்ந்ததும் 4 அல்லது 5 சன்னம் என் உடலில் தைத்தது. கையிலும் மார்பிலும் சன்னங்கள் பிடித்தது. டிராக்டரை வேகமாக செலுத்தும்படி சேனதிராஜிடம் கூறினேன்.

கண்டாவளை கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த செல்லையா வைரமுத்து மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு 2-வது தினமாக நேற்று வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வீரமந்திரி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் கண்டாவளையில் 69 ம் ஆண்டு மே மாதம் 7-ம் திகதி கந்தையா கந்தசாமி என்பவர் செல்லையா வைரமுத்து, சிதம்பரப்பிள்ளை சேனதிராசா ஆகியோரை சுட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் சின்னையா கதிரவேலு அதற்கு உடந்தையாக இருந்தார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. ஜெயக்கொடி புறக்டர் கே. கதிர்காமசேகரரின் அனுசரணையுடன் ஆஜராஞர்.

செல்லையா வைரமுத்து சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது! நான் கண்டாவளையில் கமம் செய்கிறேன். அங்குதான் நான் பிறந்தேன் வேலுப்பிள்ளையை தெரியும். சம்பவம் நடந்ததினம் காலை 10 மணியளவில் அவர் வீட்டிற்கு சென்றேன் நான் அங்கிருந்த போது வேலுப்பிள்ளையின் மகன் யோகராசா வந்தார். அப்போது தவராசா, சேனதிராசா ஆகியோரும் இருந்தார்கள்.

வேலுப்பிள்ளையை சடையர் சின்னையா வேலாயுதம் ஆகியோர் தாக்கி விட்டதாக அவர் கூறிஞர். சேனதிராசா டிராக்டரை எடுத்துவர நானும் தவராசாவும் போனேம். தவராசா மட்காட்டில் இருந்தார். நான் இலக்க தகட்டைப் பிடித்து கொண்டிருந்தேன்.

மற்றொரு டிராக்டர் எதிர்ப் பக்கத்திலிருந்து வந்தது. 2-ம் எதிரி கையில் துவக்கு இருந்தது. சேனதிராசா டிராக்டரை திருப்பினுர். 2ம் எதிரி 1ம் எதிரியிடம் துவக்கை கொடுத்தார், 1-ம் எதிரி எங்கள் பக்கம் குறிவைத்தார் 4 அல்லது 5 சன்னங்கள் என் உடலில் தைத்ததும் டிராக்டரை வேகமாக செலுத்தும்படி கூறினேன். நான் விழவில்லை அதன்பின் கந்தசாமி சுட்டார். தவராசாவைத் தாக்கியது இலக்கத் தகட்டையும் சன்னம் துளைத்தது. அந்தச் சன்னம் தவராசாவின் இடதுகாலைத்தைத்தது தவராசா டிராக்டரை நிறுத்தும்படி கூறிஞர்; நான் டிராக்டரை வேகமாக ஓட்டும்படி சொன்னேன். தவராசா அதன்பின் மயக்கமடைந்தார், அவரை சேனதிராசா ஒருகையால் தாங்கிப்பிடித்தார். நானும் அவரைப் பிடித்தேன்.

நீதியரசர்: உமக்கு மயக்கம் வரவில்லை? இல்லை.

நீதி: ஆஸ்பத்திரியில் எத்தனை நாட்கள் இருந்தீர்? வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெற்றறன்

நீதி: உமக்கு எத்தனை காயம்? 4 சன்னம் வயிற்றுப் பகுதியிலிருந்தது. முழங்கையில் ஒருசன்னமிருந்தது. மற்றொரு காயமுமிருந்தது.

வைரமுத்து சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: 1-ம் வெடி தீர்ந்ததும் எனக்கு பயமாக இருந்தது. டிராக்டர் நிறுத்தப்படவில்லை ஓடிக்கொண்டிருந்தது. மற்ற டிராக்டர் காயமைமல் தூரம் ... தூரத்திலிருந்தது. ... கம் உள்ள பகுதி ... ஓம் அந்தடிராக்டர் சென்று விட்டது. அவர்கள் எங்களை தொடருகிருர்கள் என்று எனக்கு நல்லாகதெரியும். அதனுல்தான் எங்கள் டிராக்டரை திருப்பிஞேம்; நாங்கள் அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு சென்ருேம். அங்கு 1 மணித்தியாலம் வரை இருந்தோம். அதன் பின் பொலிஸார் வந்தார்கள்.

சடையர் சின்னையாவை தெரியும். அவர் கண்டாவளையில் இருப்பவர். டிராக்டரில் 2-ம் எதிரியைத் தவிர வேறு ஒருவரிடமும் ஒன்றுமிருக்கவில்லை. கொட்டனுக்கும், துவக்குக்கும் எனக்கு வித்தியாசம் நன்கு தெரியும் வேலாயுதம் கொட்டன் வைத்திருந்தார்.

எதிரிசார்பில் ஆஜரான அட்வகேட் கே ஜெயக்கொடி சாட்சியமளித்த வைரமுத்துவை குறுக்கு விசாரணைசெய்தார்.

வழ: அந்தநேரம் வேலாயுதத்தின் காயத்தை கண்டீரா?- இல்லை.

வழ: அவர் கொட்டனுல் ஏதாவது செய்தாரா?- இல்லை.

வழ: அவர் மறைத்து வைக்கவில்லை?- இல்லை.

வழ: டிராக்டர் எதிர் புறத்திலிருந்து வரும்போது கண்டீரா?- ஆம்.

வழ: டிராக்டர் திரும்பிய போது எந்தப் பக்கமாக இருந்தீர்?- மற்ற டிராக்டர் பக்கமாக.

வழ: உமது முதுகுப்பக்கம் மற்ற டிராக்டரை நோக்கியிருந்தது?- ஆம்.

வழ: அப்போது 2ம் எதிரி 1ம் எதிரியிடம் துவக்கை கொடுத்ததை கண்டீரா?- ஆம்.

வழ: அவர் குறி வைத்தார்?- ஆம்.

வழ: 2ம் வெடி தீர்ந்த போது இலக்க தகட்டை ... ராசாவை ... விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

# ஜயதரன் எழுதுவது

இந்தியத் தேர்தல் முடிவுகளைப் பற்றி இலங்கையிலே பள்ளிப் பிள்ளைகள் உள்ளிட்டுப் பொதுமக்கள் பெரும் கவனம் செலுத்திவருகிருர்கள். இந்திரா காந்திக்கு அமோகமான வெற்றி கிடைத்துவருவதைக் கேட்டுப் பொதுவாக இங்கு பலருக்கும் மகிழ்ச்சி. ஆனல் சோஷலிஸக் கொள்கைக்கு எதிரானவர்களுக்கு அவரது வெற்றி பிடிக்காது.

இந்திராவின் பெரும் வெற்றி பற்றியும், தி. மு. க. முன்னைவிட அதிகமான வெற்றியைப் பெற்றுள்ளதைக் குறித்தும் ராஜாஜி முதலியவர்கள் என்ன கருதுகிருர்களோ? ராஜாஜியை உலகப் புகழ்பெற்ற அரசியல் ஞானி என்பார்கள். ஆனல் அவர் போட்ட கப்புக்கணக்கு அவரது புகழை உயர்த்தக்கூடியதாக இல்லை. பாவம்!

0 0 0

இலங்கையிலே ஸ்ரீமாவுக்கு சென்ற தேர்தலில் எவ்விதம் வெற்றி ஏற்பட்டதோ அதே போல். இந்தியாவில் இந்திராவுக்கும் இத்தேர்தலில் வெற்றி கிடைத்துள்ளது இவ்விரு நாட்டு மக்களும் பெண்களின் தலைமையிலேயே நம்பிக்கை வைத்து. நாட்டு ஆட்சிப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்துள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

வாக்காளரில் சுமரர் அரைவாசிப்பேர் பெண்கள். ஒரு சிலரைத் தவிரப் பெண்கள் எல்லோரும் அநேகமாக ஒரு பெண்ணைத் தலைவராகக்கொண்ட கட்சிக்கே வாக்களித்திருப்பின் அதில் வியப்பில்லை எந்தநாட்டிலே,எந்த வீட்டிலே பெண்மைக்குமதிப்பு அளித்துக் கௌரவிக்கிருர்களோ, அந்த நாடும், அந்தவீடும் மேன்மையுறும் என்பது ஆன்ருேர் வாக்கு. இலங்கையும். இந்தியாவும் இரு பெண்களிடமே நாட்டு ஆட்சிப் பொறுப்பை நம்பிக்கையுடன் அளித்துள்ளன இவ்விரு நாடுகளின் எதிர்காலமும் மேன்மையுறும் என்றே நம்பலாமா?

தோற்றுவிட்ட ஆண் கட்சியினர், வீண் உபத்திரவம் செய்யாமல் ஒத்துழைத்தால் இவ்விரு பெண்களின் தலைமையிலும் இரு நாடுகளும் முன்னேறி மக்களின் கஷ்டங்களும் தீர வழிபிறக்கக் கூடும்.

0 0 0

டில்லி லோகசபையில். பெரும்பான்மைப் பலம் பெற்றுவிட்டதால். இனி வேறெந்தக் கட்சியின் தயவையும் நம்பியிராமல் தம் திட்டப்படி காரியம்செய்ய இந்திராவுக்குப் புதிய வாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்தியத் தலைமை அரசாங்கம் அதிக ஸ்திரமானதாகவும் பலமாகவும் அமைந்துள்ளதால், இந்தியாவின் மதிப்பு உலகில் பெரிதும் உயர்வதாக இருக்கும். தம் மீது மக்கள் வைத்துள்ள பெரும் நம்பிக்கையையும், தமக்கு ஏற்பட்டுள்ள பெரும் பொறுப்பையும் நினைக்கும்போது. தமக்கு இவ்வெற்றி குறித்து மிகுந்த அடக்கம் ஏற்படுவதாக இந்தியப் பிரதமர் இந்திரா பணிவுடன் கூறுகின்ருர். இடைத்த வெற்றியைக் கொண்டு அவர் துள்ளவில்லை எதிராளிகளைப் பற்றி குறைவாகக்கூறவுமில்லை தோற்ற ஓர் தலைவர், இந்திராபெற்ற வெற்றிக்காக அவரைப் பாராட்டி இருக்கிருர். இந்திராவின் பொறுப்பு மிகப் பெரியது நெருக்கடியான இந்தச் சமயத்தில் மலைசரித்தாலும் மனம் கலங்காத ஒரு வீராங்கனை இந்தியாவுக்குத் தலைமைவகிக்க நடத்தக் கிடைத்துள்ளது இந்தியா செய்த பாக்கியமேயாகும்.

தமது அருமைப் புதல்வியார், அரசியலில் முன்மையிடப் பெரும் வெற்றி பெறுவதைக் காண, நேருஜியின் ஆத்மாவுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாயும், பெருமையாயும் இருக்கும். தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் தம் தாய் நாட்டுக்களித்துப் பெரும் தியாகம் செய்து தொண்டாற்றினர் நேருஜி. தமக்குப் பின் தமது ஒரே புதல்வியை நாட்டுக்களித்துள்ளது, அவர் செய்துள்ள எல்லா நன்மைகளையும்விட பெரிதாகுமல்லவா? இன்று இந்திராவை விட்டால், இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பை ஏற்க மக்களின் நம்பிக்கையைப் பெற்ற தலைவர் வேறுயரே இருக்கிருர்கள் இந்தவெற்றி மூலம் பெரும் பொறுப்பை அவருக்குச் சமத்திய இந்தியப் பொதுமக்கள் ஒத்துழைப்பதாயின் இந்தியாவின் பிரச்னைகளும். மக்களின் இன்னல்களும் படிப்படியாகக் குறைந்து, இந்தியா தலைநிமிர்ந்து அதன் எதிர்காலமும் மேலாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

0 0 0

தமிழகத்தில் தி. மு. க விடமே மீண்டும் ஆட்சிப் பொறுப்பை மக்கள் ஒப்புவித்ததற்குக் காரணமுண்டு. தலைமை அரசாங்கத்துடன் ஒத்துழைத்து. பெரும் நன்மைகள் கிடைக்கும்படிசெய்துள்ளார் முதலமைச்சர் கருணாநிதி. இத்தேர்தலிலும் இதே ஒத்துழைப்பு நிலவியதால் இந்த நல்லுறவு இனியும் நீடித்துத் தமிழகத்துக்கு இன்னும அதிக உதவிகள் கிடைக்கும்படி அவரது மேலான ராஜதந்திரம் உதவுமென்பதே பொதுவாகத் தமிழ்மக்களின் நம்பிக்கையாக இருக்க வேண்டும்.

## "சேவையே இலட்சியம்"

பருத்தித்துறை, சனி

எந்த இடத்தில் சேவை செய்ய நேரிட்டாலும் மக்களின் சேவையே இலட்சியமாக இருக்கவேண்டும். ஏனெனில மக்களின் வியர்வையும் இரத்தமும் சேர்ந்த பொதுப்பணமே எமக்குச் சம்பளமாக வழங்கப்படுகிறது. மக்கள் அதிருப்தியடைந்தால் நாம் எமது கடமையைச் சரிவரச் செய்வதில் தவறிவிட்டோமென்பதே கருத்தாகும்"

இவ்வாறு நெலியடிப் பட்டினசபையில் கடமையாற்றி வவுனியாப் பட்டினசபை செல்லும் ஓவசியர் திரு. ... தியாகராசாவுக்கும், யாழ் மாநகரசபைக்கு மாறிச் செல்லும் பணப்பொறுப்பாளர் திரு எஸ். ...சிலாமணிக்கும், கொக்குவில் கிராமசபைக்கு மாறிச் செல்லும் வருமான வசூல் உத்தியோகத்தர் திரு. ஆர். ...ராசேந்திரத்திற்கும் நெல்லியடிப் பட்டினசபை அளித்த பிரியாவிடை வைபவத்திற்குத் தலைமைதாங்கிப் பேசிய பட்டினசபை உறுப்பினர் திரு. ந. கனகசுந்தரம் கூறிஞர்.

பட்டினசபைச் செயலாளர் திரு. எஸ் யோசேப் பேசுகையில், நேர்மையே ஒன்றே பதவி உயர்வுக்கு வழிலகுக்குமெனக் கூறிஞர். மேலும் பலர் பாராட்டுரை வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக விவசாய ஸ்தாபனத்தின் உதவியுடன்

# றூல், நண்டு ஏற்றுமதி!

## ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு

பாணந்துறை, சனி

உலக உணவு விவசாய ஸ்தாபனம் இறூல், சிங்கறூல், நண்டு, வாத்து ஆகியவை கொண்ட ஏற்றுமதி வர்த்தகம் ஒன்றை அரசாங்க உதவியுடன் அமுல் நடாத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக கடற்றொழில் அனுபவமுள்ள சில நிபுணர்கள் இம்மாதம் இங்குவந்து பாணந்துறை பொல்கொடவாவி, நதி முதலிய நீர்நிலைகளில் ஆராய்ச்சி நடத்துவர். இதனால் ஆயிரக்கணக்கான வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இதில் பிடிக்கப்படும் இறூல், நண்டு, சிங்கறூல், வாத்து ஆகியன அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும்.

மேற்படி தகவலை களுத்துறை அரசாங்க அதிபர் திரு எஸ் டி ஸி சமரதுங்கா நேற்று முன்தினம் நடைபெற்ற கிராமசேவகர்கள் கிதலஸ்தாபனத் தலைவர்கள் அரசாங்க அதிகாரிகள் கூட்டத்தில் தெரிவித்தார்.

## யாழ். வாசிகளின் திருவிழா

நாவலப்பிட்டி, சனி

நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த திருவிழா வைபவத்தின் கடைசிநாள் நிகழ்ச்சியாக யாழ்ப்பாண வாசிகளின் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்ட இவ்வைபவத்தின்போது ஆத்மஜோதி திரு நா முத்தையா, திரு நா அருமைநாயகம் ஆகியோர் கூட்டுப் பிரார்த்தனை நடாத்தினர். யாழ்ப்பாணம் திரு சி பரமசாமியின் முத்துச் சப்பறம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அளவெட்டி பாலகிருஷ்ணன் கோஷ்டியின் நாதஸ்வரக் கச்சேரியும் நிகழ்ந்தது.

......

## "தொழிலாளருக்கு ஏற்ற திட்டங்கள் தேவை"

பாண்டிருப்பு, சனி

"தொழிலாளியே நாட்டின் உயிர்மூச்சு. தொழிலாளர் வர்க்கத்தின் மனது புண்படும்வகையாக நடந்துகொண்ட எந்த ஆட்சியும் நிலைநின்றமைக்கு வரலாற்றில் சான்றுகளே இல்லை. அரசாங்கம் தொழிலாளரை வளம்படுத்தும் திட்டங்கள் தீட்டி நாட்டின் மலர்ச்சியை ஏற்படுத்துதல் உடனடி தேவையாகும்."

இவ்வாறு கிழக்கிலங்கை சலவைத் தொழிலாளர் சங்கத்தின் விசேட கூட்டத்தில் உரை நிகழ்த்திய சங்கத் தலைவர் திரு. நீ. செல்வராசா கூறினார்.

......

## சந்நிதி சங்காபிஷேகம்

மாவிட்டபுரம், சனி

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஸ்ரீ சுப்பிரமணிய கோவில் சகஸ்ர மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 23ம் திகதி நடைபெற உள்ளது.

பகல் மகா சங்காபிஷேகமும் இரவு விசேட பூசைகள் உற்சவமும் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை பிரமஸ்ரீ செ விசாகரத்தின ஐயர் மேற்கொண்டுள்ளார்.

......

## மண்டைதீவு கிராமமுன்னேற்ற சங்க நிர்வாகிகள்

மண்டைதீவு, சனி

"பல ஆண்டுகளாக கட்டப்படாதிருந்த மண்டைதீவு தெற்கு கிராம முன்னேற்றச் சங்கம் மீண்டும் கட்டப்படவேண்டும்" என்ற மண்டைதீவு தெற்கு மக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து தீவுப்பகுதி கிராம அபிவிருத்தி அதிகாரியினால் மண்டைதீவு கிராம சபை மண்டபத்தில் கி மு சங்கத் தலைவர் திரு க கைலாசபிள்ளை தலைமையில் கிராம முன்னேற்றச் சங்கம் கூட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவை நடத்துமாறு அபிவிருத்தி அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க புதிய நிர்வாக சபை உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது.

காப்பாளர்: திரு க கைலாசபிள்ளை, தலைவர்: திரு இ நா இராசலிங்கம், உபதலைவர்: திரு சி சோமசேகரம், செயலாளர்: திரு ஏ பாலலிங்கம், உபசெயலாளர்: திரு ஏ திருஞானபாலன், தனாதிகாரி: திரு நா வரதராசன்.

ஆறு அங்கத்தவர்கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் கிராம அபிவிருத்தி அதிகாரி, கிராம சேவகர் உட்பட தீவுப்பகுதி காரியாலய நிர்வாக அதிகாரி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## வெற்றியைக் கொண்டாடினர்

மாவிட்டபுரம், சனி

தமிழக தேர்தலில் தி. மு. க. வேட்பாளர்கள் வெற்றி பெற்றதையொட்டி காங்கேசன்துறைத் தொகுதியில் தமிழரசுக் கொடிகளும் தி மு க கொடிகளும் ஒன்றாகப் பறக்கவிடப்பட்டிருந்தன.

தி மு. கழகம் அமோக வெற்றியீட்டி ஆட்சியேறும் பெரும்பான்மை பலம் பெற்றதை குதூகலத்துடன் மக்கள் கொண்டாடினர்கள்.

தி மு. க கொடிகளை சைக்கிள்களில் கட்டி இளைஞர்கள் ஊர்வலமாக சென்றும் தி மு க வேட்பாளர் வெற்றி என்று அறிவிக்கப்பட்டதும் பட்டாசு கொழுத்தி தி மு க வுக்கு ஜே ஜே என்று கூறியும் தமிழக தி.மு.க வெற்றியை இங்கு மக்கள் கொண்டாடினர்.

## தமிழ் இல்லையாம்

மாவிட்டபுரம், சனி

அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பதிவிலக்கத்தில் தமிழ் புறக்கணிக்கப்பட்டதையிட்டு உடன் நடவடிக்கை எடுத்து தமிழ், சிங்கள மொழியில் இடம்பெற செய்யும்படி அளவெட்டி தமிழரசுக் கிளை கோரிக்கை விடுத்துள்ளது.

அளவெட்டி தமிழரசுக் கிளையினர் காங்கேசன்துறை எம் பி. எஸ் ஜே. வி. செல்வநாயகம், ஊர்காவற்றுறை எம். பி. கா. பொ. இரத்தினம் ஆகியோருக்கு அனுப்பியுள்ள அவசரத்தியில் இவ்விடயம் குறித்து சுட்டிக்காட்டியுள்ளனர்.

......

## 10,000 ரூபா வெகுமதி

கோட்டை, சனி

சமீபத்தில் நடந்த அமெரிக்க தூதரகத் தாக்குதலின் போது இன்ஸ்பெக்டர் கருணாரத்னாவைக் கத்தியால் குத்தியவரைக் காட்டிக் கொடுப்பவருக்கு அல்லது தகவல் கொடுப்பவருக்கு 10000ரூபா வெகுமதி வழங்குவதாக போக்குவரத்து தலைமை பொலிஸ் அதிபர் திரு. ஏ. எஸ் மரியநாயகம் அறிவித்துள்ளார்.

## இன்றைய பலன்

மாசி மாதம் 30-ம் திகதி (14-3-71)

மேஷம்- அடுத்தவரை நம்புவதால் ஆபத்து மிகவுண்டு. வீண் செலவு வேண்டாம். விபரீதம் விளைந்திடுமே.

ரிஷபம்- சிந்தனைக் கலைகள் தரக்கும். சிறிவரும் கோபம் உடன்பிறந்த சகோதரத்தின் உடல்நிலையும் கவலைதரும்.

மிதுனம்- கடமையில் ஆர்வம் பிறக்கும். இதன்மூலம் புதிய பாதை திறக்கும். இன்று நலலநாள்.

கடகம்- மதிப்பு உயரும், பொதுமக்கள் ஆதரவு கிடைக்கும். புத்திரரால் புகழுமுண்டு. புதினமும் கேட்பீர்.

சிம்மம்- துன்பத்தின் ரேகைகள் நிழலாடிடம் போடும். துணைவரின் உடல் நலமும் கெடும் பணமும் பெருமளவில் செலவாகும்.

கன்னி- நாள் எல்லாம் அலைச்சல், உடலில் நலிவு தோன்றும். பிணிக்கு இடம் கொடாது சுகாதாரத்தைப் பேணுக.

துலாம்- போதுமென்ற மனமும் புண்ணிய விருப்பும் தலைதூக்கும். பொருள் வரவு திருப்திகரமாக இருக்கும்.

விருட்சிகம்- சுற்று வட்டாரத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறுபிணிக்கும் இடமுண்டு. தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும்.

தனுசு- அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும். அறவழியில் ஆர்வம் பிறக்கும் ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும்.

மகரம்- வேண்டியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நீண்டநாள் பிணி இன்று விடைபெறும்.

கும்பம்- நெருங்கிய நண்பர் ஒருவருடன் பகைத்துக் கொள்ளுவீர்: அடுத்துக் கெடுப்பதற்கு பலர் காத்திருப்பர்.

மீனம்- நலன் தரும் நிகழ்ச்சிகள் நடைபெறும். குடும்பத்தில் மிக்க மகிழ்ச்சியுண்டு. நேர்மைவழி நிற்பீர்கள்.

சோதிடக் கலாநிதி

இருமலை க. வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 14- 3- 71

344 மீ அல் 61மீ

(செய்திகள்: காலை6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15மெல்லிசை. 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதம்,


344மீ அல் 49 மீ

பகல் 12-00 இடைவேளை இசை, 1-00 சுதம்பஇசை.

344 மீ அல் 61 மீ

4-30 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஒடிவிளையாடு பாப்பா.

இரவு 6-15 வயலின், 6-30 கிராமிய பாடல்கள், 6-45 கண்ணகி காவியம், 7-00 பிறநாட்டு தேசிய கீதங்கள், 7-15 பாட்டு 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 [illegible] பாடல், 10-00 நேயர் விருப்பம், 10-30 [illegible]த் தொகுப்பு.

உங்கள் மண் பொன் விளையும் பூமியாக வளம் பெற...

சுமார் முக்கால் நூற்றாண்டு காலமாக இலங்கையின் விவசாயத் துறைக்கு அதி சிறந்த உர வகைகள், விவசாய ரசாயனப் பொருள்கள், தெளி கருவிகள் ஆகியவற்றை வழங்கி, இலங்கை மக்களின் காணி பூமிகளை வளமாக்கி, அவர்கள் அதிக விளைச்சலையும் அபரிமித இலாபத்தையும் பெறத் துணை நின்று வரும் முன்னோடி ஸ்தாபனம் பவர்ஸ். நீங்களும் உங்கள் மண்ணை வளமாக்கி செழிப்பான விளைச்சலைப் பெற பவர்ஸ் பொருள்களையே பாவியுங்கள்.

ஏ.பவர் அன் கொம்பனி லிமிடெட்

த. பெ. இல. 11. கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கெட்

## தெல்லிப்பளை யூனியன் வெற்றி

மாவிட்டபுரம், சனி

கொக்குவில் இந்துக்கல்லூரியும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் மோதிய சிநேகபூர்வமான கிரிக்கெட்போட்டியில் யூனியன் கல்லூரி 10 விக்கட்டால் வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் நடந்த இப்போட்டியில் முதலிருந்து துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்து சகல விக்கட்டுக்களையும் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது.

2-ம் ஆட்டத்தில் முதலில் ஆடிய கொக்குவில் இந்து சகல விக்கட்டுக்களையும் இழந்து 25 ஓட்டத்துடன் ஆட்டம் இழந்தது இதை யடுத்து ஆடிய யூனியன் கல்லூரி விக்கட் ஒன்றையும் இழக்காமல் 10 ஓட்டங்களுடன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இறுதியில் யூனியன் 10 விக்கட்டால் வென்றது

இரண்டாம் ஆட்டத்தில் யூனியன் வீரர்கள் எஸ். சச்சிதானந்தசிவம்6 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4 விக்கட்டுக்களையும் ஆர். ஸ்ரீதரன் 18 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கட்டுக்களையும் வீழ்த்தினார்கள் முதலாவது ஆட்டத்தில் கொக்குவில் வீரர் எம். சரவணபவான் 16 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கட்டுக்களை வீழ்த்தி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார்.

இப்போட்டிக்கு ஏ. சுப்பிரமணியம் கே. சேவையர் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தார்கள்

## உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த இரு 'பி' பிரிவுப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

### ஜொலிஸ்டார் வெற்றி

ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்கும், கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் ஜொலிஸ்டார் கழகம் 4-1 கோல்களால் வெற்றி பெற்றது.

### அரியாலை வெற்றி

அரியாலை விளையாட்டுக் கழகத்துக்கும், வதிரி டைய்மன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் அரியாலைக் கழகம் 2-1 கோல்களால் வெற்றி பெற்றது.

(தே. நி)

## சேக்கிழார் மன்ற பேச்சுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தினர் மே மாதம் நடுப் பகுதியில் பேச்சுப்போட்டி ஒன்றினை நடாத்துகிறார்கள். சகல பாடசாலைகளும் இப் பேச்சுப் போட்டியில்கலந்துகொள்ளலாம். மாணவர்களுக்கும், மாணவியர்க்கும் வெவ்வேறாக நடாத்தப்படும். கீழ்ப்பிரிவிலும் மேற்பிரிவிலும் முதலிடம் பெறுபவர்களுக்கு "தங்கப்பதக்கம்" வழங்கப்படும். இம்மாதம் 28-ம் திகதி முன்னர் பேச்சுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் விண்ணப்பிக்கவேண்டும்.

## சேவைநலம் பாராட்டு விழா

சுன்னாகம், சனி

மல்லாகம் இந்துக்கல்லூரியில் பதில் கனிஷ்ட அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற பிரமஸ்ரீ இ. சபாரத்தின ஐயருக்கு ஆசிரியர் சங்கச் சார்பில் சேவைநலம் பாராட்டுவிழா நடைபெற்றது. வைபவத்திற்கு திரு. ந. முருகையா தலைமை வகித்தார்.

அதிபர் திரு. அ. சிவசுப்பிரமணியம் தமது பாராட்டுரையில், ஓய்வுபெற்ற ஐயர் ஒரு சிறந்த நிர்வாகஸ்தர் என்றும் அவரது அயரா உழைப்பினால் கல்லூரியில் பிரார்த்தனை மண்டபம் கட்டப்பட்டது என்றும் சொன்னார்.

சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்ததுடன், இரு ஆண்டுகள் ஆசிரிய சங்கத் தலைவராக இருந்த ஐயர் அரும் பணியாற்றியதாகப் பாராட்டினார்.

ஆசிரியை திருமதி செல்வராணி நடராஜா, உடற்பயிற்சிப் போதனாசிரியர் திரு. அ. ஐம்பித்துரை ஆகியோரும் பேசினர். ஆசிரிய சங்கச் செயலாளர் திருமதி பாலாம்பிகை பரிசில்களை வழங்கினார்.

யாழ். மாவட்ட

## கி. சேவையாளர் நிர்வாகசபை கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்கத்தின் விசேட நிர்வாகசபைக் கூட்டம் யாழ். கிறீஸ்தவ மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. கபிரியேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிராம சேவையாளர்களின் மாற்றங்கள் குறித்து நீண்ட நேரமாக விவாதிக்கப்பட்டது. மாற்றச் சபையின் பிரதிநிதியான, சங்கச் செயலாளர் திரு. துரைசிங்கம் பொதுக்கூட்டம் வரை தொடர்ந்து கடமையாற்றலாம் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## மதியுரைக் குழு

மன்னார், சனி

மன்னார் காரியாதிகாரி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றமதியுரைக் குழு நியமனத்தில் கீழ்க்கண்டவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர் திரு. வி. நாகேஸ்வரன் (பிரதமலிகிதர்) திரு. எஸ். சூசையப்பு பீரிஸ் திரு எஸ். ஏ. சந்தியாப்பிள்ளை திரு. எஸ். கந்தசாமி திரு பீ. எல். அருளப்பு (காரியாலய பியோன்) ஆகியோர்.

## 'போட்டிகளினால் மாணவர்க்கு பெரிதும் பலன் கிடைக்கிறது'

யாழ்ப்பாணம், ஞாயிறு

"இப்படியான கட்டுரைப் பேச்சுப் போட்டிகளையும், இன்னிசைப் போட்டிகளையும் கல்லூரி மாணவரிடையே நடத்துவதனால் பல்லின மாணவர் பலனடைகின்றார்கள். செயல்முறையில் தம்மைப் போன்ற மாணவர் பேச்சுக்களையும் கீதங்களைப் மெருகூட்டிப் பேசுவதாலும் பாடுவதாலும் கவர்ந்து விடுவார்கள்.

இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரிக் குமாரசாமி மண்டபத்தில் வடமாகாண ஆசிரியர்சங்க கல்விச்சபைத் தலைவர் திரு. கே. முத்துக்குமாரசாமி கூறினார்.

தொடர்ந்து அவர் பேசிய போது குறிப்பிட்டதாவது:

பாடசாலையின் வாழ்நாள் ஒருவரின் மறக்க முடியாது அவரது பூர்த்தியான காலம் வரை நினைவில் இடம்பெறுகிறது.

பேச்சுக்களில் மாணவர் ரசிக்கும் அம்சங்கள் எல்லாம் வாழ்நாள் முழுவதும் நீடித்துக் கொண்டேயிருக்கும். ஆகவே நல்ல போட்டிகளைக் கல்விச்சபை ஏற்படுத்தி வருகிறது. பாடசாலைகள் அனைத்தும் பங்குபற்றி நல்ல தொண்டு செய்து வருகின்றன.

வடமாகாண ஆசிரியர் சங்கக் கல்விச் சபையின் செயலாளர் திரு எல். சிவசுப்பிரமணியசர்மா பேசுகையில், "பேச்சு, இசை, கட்டுரை போன்ற போட்டிகளில் சுமார் 1654 பிள்ளைகள் 69 பாடசாலைகள் மூலம் இப்போட்டிகளில் பங்குபற்றியது பாராட்டுக்குரியது" என்றார்

வெற்றிபெற்றவர் களது பரிசில்களை வடமாகாண ஆசிரியர்சங்கத் தலைவர் திரு. கே. மகாலிங்கசிவம் வழங்கினார். (கு வி ம

## வடமாகாண ஆசிரிய சங்க சங்கீதபேச்சுபோட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் கல்விச்சபையினால் நடாத்தப்பட்ட 1971-ம் ஆண்டுக்கான சங்கீத கட்டுரை போட்டி முடிவுகள் விபரம் வருமாறு:-

### தமிழ் ஆண்கள்

அதிமேற்பிரிவு கே. காளிதாச புலவரி ஸ்கந்தா, பி. கணேசமூர்த்தி ஸ்கந்தா, ஏ. குமாரன் கரவெட்டி திரு. ம் மத்திய மகாவித்தியாலயம்.

மேற்பிரிவு: ரீ. சிவதெட்சணாமூர்த்தி யாழ். இந்துக் கல்லூரி, என். அருட்சோதி மகாஜனா, எல். பாலச்சந்திரன் நடேஸ்வரா.

மத்தியபிரிவு: பி. ரஜீபதி யாழ். இந்துக்கல்லூரி, என். சோதிநாதன் மகாஜனா, ஆர். நரேந்திரன் ஹாட்லி,

கீழ்ப்பிரிவு: பி. ஆறுமுகம் மானிப். இந்துக்கல்லூரி, ஈ. பாலபாஸ்கரன் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, எஸ். ஞானசம்பந்தன் யாழ். இந்துக்கல்லூரி.

### பெண்கள்

அதிமேற்பிரிவு: எஸ். திலகவதி சாவகச்சேரி இந்துக் கல்லூரி, என் சுபத்திரா தேவி யூனியன்கல்லூரி, வி. மகேஸ்வரி வடமராட்சி இந்துக் கல்லூரி.

மேற்பிரிவு: ஜே நிதியவதி இராமநாதன் கல்லூரி, என் நதீன் மகாஜன, ரி மகாலட்சுமி இராமநாதன் கல்லூரி.

மத்தியபிரிவு: எஸ் கௌரி சங்கரி மகாஜனா, எல். நாகசக்தி ஸ்கந்தா, ஏ. சுதானந்தலட்சுமி மானிப். இந்து மகளிர் கல்லூரி.

கீழ்ப்பிரிவு: எஸ் ரூபராணி உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி, வி திருமகள் அருணோதயா, கே சுசீலா மானிப். இந்து மகளிர் கல்லூரி.

### ஆங்கிலம் ஆண்கள்

அதிமேற்பிரிவு: என் சிவக்குமார் ஹாட்லி, எஸ் என் இராகவன் மானிப், இந்துக் கல்லூரி. எஸ் மகாலிங்கம் மானிப். இந்துக்கல்லூரி.

மேற்பிரிவு: ஜே வி மதுரநாயகம் மகாஜனா. ஆர் இந்திரராஜ் ஹாட்லி, எஸ் சிவபாலன் மகாஜனா.

மத்திய பிரிவு: வி கிரிதரன் விக்ரோறியாக்கல்லூரி, என் ஜீவநாதன் யாழ். இந்துக் கல்லூரி. ஜே ஜெயசீலன் ஹாட்லி.

கீழ்ப்பிரிவு: பிட்டர் தேவநாதன் மகாஜனா, ஆர் செல்வானந்தன் மகாஜனா. ஆர் அகிலன் யாழ். மத்திய கல்லூரி.

### ஆங்கிலம் பெண்கள்

மேற்பிரிவு: ஆர் நிர்மலா யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை, எஸ் சுபாஷினி இராமநாதன்கல்லூரி, எஸ் வசந்தா உடும்பிராய் இந்துக்கல்லூரி, மத்திய பிரிவு எஸ கௌரி இராமநாதன் கல்லூரி, எஸ் இந்திரா மானிப். இந்துக் கல்லூரி, ஏ இராஜகுமாரி மெதடிஸ்த பெண்கள் கல்லூரி.

கீழ்ப்பிரிவு: ஏ அலோமா மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி, எஸ் சாந்தினி மானிப். இந்துமகளிர் கல்லூரி, எஸ் ரூபராணி உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி.

### சங்கீதம்

மேற்பிரிவு ஆண்கள்: எஸ் சிவஞானராஜா மகாஜனா, எஸ் சிவராஜகுமார் ஸ்கந்தா என் லெட்சுமண குமார் ஸ்கந்தா.

கீழ்ப்பிரிவு ஆண்கள்: எஸ் அருள்மணிநாதன் யூனியன் கல்லூரி, வி கிரிதரன் விக்ரோறியாக்கல்லூரி. எம் சண்முகலிங்கராஜா அருணோதயா.

மேற்பிரிவு பெண்கள்: கே வதனி அருணோதயா, எஸ் வனஜா இராமநாதன் கல்லூரி, எஸ் சிவனேஸ்வரி செங்குந்தா கல்லூரி.

கீழ்ப்பிரிவு பெண்கள்: கே சாந்தி இராமநாதன் கல்லூரி, ஆர் ராஜீவி அருணோதயா, எஸ் சிவசக்தி இராமநாதன் கல்லூரி.

### குழுவினராக

மேற்பிரிவு ஆண்கள்: ஸ்கந்தவரோதயாக்கல்லூரி,

(8ம்பக்கம் பார்க்க)

## மகளிர் மகா வித்தியாலயம் சாம்பியன்

நாவலப்பிட்டி, சனி

டாக்டர் சுப்பிரமணியம் வெற்றிக் கேடயத்திற்கான இறுதிப்போட்டியில் நாவலப்பிட்டி மகளிர் மகா வித்தியாலயம் சாம்பியனானது பரிசளிப்பு விழாவுக்கு முன் நடந்த காட்சிப்போட்டியொன்றில் மகளிர் மகா வித்தியாலயமும் கூட்டுக் கோஷ்டியும் மோதின.

இப்போட்டியில் மகளிர் வித்தியாலயம் கூட்டுக் கோஷ்டியை 19—15புள்ளிகளால் வெற்றி பெற்றது. திருமதி சி. பி. பெரேரா ணுடோவும் திருமதி மதியாபரணமும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.


வெற்றிபெற்ற கோஷ்டிக்கு டாக்டர் சுப்பிரமணியம் கேடயமும் இரண்டாவது இடத்தைப் பெற்ற யுனைட்டெட் கோஷ்டிக்கு டாக்டர் திருமதி பாசி வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டது.


## கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY நீர்ப்பாசன பம்புகள்

★ மணிக்கு 10,000 கலன்
★ குறைந்த இயக்கச் செலவு
★ பராமரிப்புச் சுலபம்



2" பெற்றோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன, மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்றோல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டாக் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இன்டஸ்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல; 37/39, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு. ஏ. சி. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி: 7031


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜனநாயகக் குடியரசா? சமஷ்டிக் குடியரசா?

## இன்று அ. நிர்ணயசபையில் விவாதம்

கொழும்பு, ஞாயிறு இலங்கைக்கு உருவாக்கப்படவிருக்கும் புதிய அரசியல் சாஸனத்துக்கான அடிப்படைத் தீர்மானங்கள் பற்றி ஆராய்வதற்கு இன்று மாலை அரசியல் நிர்ணய சபைகூடுகிறது. இக்கூட்டத்தில் அடிப்படைத்தீர்மானங்களுக்கான முதலாவது பிரேரணை ஆராயப்படும். இலங்கை ஜனநாயக் குடியரசாக இருப்பதா அல்லது சமஷ்டிக் குடியரசாக இருப்பதா என்பதுபற்றி விவாதிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

பெரும்பாலும் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ் ஜே வி செல்வநாயகத்தால் கொண்டுவரப்பட்ட திருத்தப்பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்கூட்டம் 14, 15, 16ம் திகதிகளில் தொடர்ந்து நடைபெறும்.

### மூவரின் இருத்தங்கள் பரிசீலனை

அரசியல் திட்ட அமைச்சரினால் கொண்டுவரப்பட்ட அடிப்படைத் தீர்மானங்களுக்கு எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் திரு டட்லி சேனநாயக்கா, சமஷ்டிக்கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் ஆகியோர் கொண்டுவந்த திருத்தங்களை மட்டும் இன்று கூடும் அரசியல் நிர்ணயசபைமுன் வழிகாட்டு நடைமுறைக்குழு சமர்ப்பிக்கிறது.

மேற்படி அடிப்படைத் தீர்மானங்களுக்குத் திருத்தங்கள் அனுப்பிய சகலருக்கும் அரசியல் திட்ட அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா நடவடிக்கைக்குழு ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளாதது குறித்து குழு வருத்தம் தெரிவித்துள்ளதாக எழுதியுள்ளார்.

## கச்சதீவு நோக்கி கஜபாகு!

கொழும்பு, சனி சர்ச்சைக்குரிய கச்சதீவு நோக்கி கடற்படையின் கஜபாகு போர்க்கப்பல் கொழும்பிலிருந்து நேற்று புறப்பட்டது கமாண்டர் ஏ டபிள்யூ ஏச் பெரேரா தலைமையில் 150 கடற்படை வீரர்கள் கஜபாகுவில் வருகின்றனர்.

இம்மாதம் 19 திகதி கச்சதீவு பெருநாள் ஆரம்பமாகிறது இலங்கை இந்திய யாத்திரிகர்கள் ஆயிரக்கணக்கில் கச்சதீவுக்குச் செல்வார்கள்.

கள்ளக்கடத்தல் சட்டவிரோத குடியேற்றக்காரர் போன்றவற்றை தீவிரமாக கச்சதீவில் 'கஜபாகு' கண்காணிக்கும். சென்றமுறையும் 'கஜபாகு' கச்சதீவில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தது (சி பி ஏ)

## நாவலர் முத்திரை நவம்பரில் நல்லூரில் வெளியிடப்படும்

யாழ்ப்பாணம், சனி ஆறுமுக நாவலரின் ஞாபகார்த்த 5 சத முத்திரை இவ்வருடம் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் நல்லூரில் வெளியிடப்படவிருப்பதாக ஏ. சி எல். பி வெரெலிக சேவிஸ் உரிமையாளர் திரு எஸ். எஸ். முத்துக்குமாரு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஆனந்தகுமாரசாமியின் ஞாபகார்த்த 5 சத முத்திரையும்நவம்பர்மாதம் முதல் வாரத்தில் மாவிப்பாயில் வெளியிடப்படும். இவைதவிர அதேதினத்தில் முனிதாச குமாரதுங்க, வண எஸ் மகிந்த ஆனந்தராஜா கருணா ஆகியோரின் 5 சத ஞாபகார்த்த முத்திரைகளும் வெளியிடப்படும்.

இவ்வருடம் மே மாதம் 11-ம் தேதி பௌத்தசமய உலகநாட்டாட்சியின் 10வது மாநாட்டின் ஞாபகார்த்தமாக 5 சதமுத்திரையொன்றும் வெளியிடப்படவிருக்கிறது.

1-7-71-ல் கொழும்புத் திட்ட 20 ஆண்டு நிறைவு விழாவையொட்டி 45 சத முத்திரை ஒன்றுவெளியிடப்படும் 8-7-71 ல் காலஞ்சென்ற ஈ.ஏச். பீலின் ஞாபகார்த்த 25 சத முத்திரை வெளியிடப்படும் அக்டோபர் 1-ல் வாரத்தில் நிறவேற்றுமை அகற்றுவதற்கான சர்வதேசஆண்டுஞாபகார்த்தமுத்திரையொன்று வெளியிடப்படும் அக்டோபர் முதல்வாரத்தில சர்வதேச நிதிமன்ற 25-வது நிறைவுவிழாவையொட்டி முத்திரையொன்றும் வெளியிடப்படும்.

நவம்பர் முதல் வாரத்தில் ஒரே தினத்தில் ஐந்துபெரியார்களின் 5 சத ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்படும் டிசம்பர் மாதம், ஐக்கியநாடுகள் கல்விகலாச்சாரசமூக நிறைவுதினமுத்திரையும் ஐக்கியநாடுகள் சிறுவர் ஞாபகார்த்த முத்திரையும் வெளியிடப்படவிருக்கிறது.

## 'ஆயுதப்படைகளுக்கு தமிழ் முஸ்லிம்களையும் திரட்டுக'

கொழும்பு. சனி அரசாங்கசேவைக்கு கம்பியூட்டர் முறைமூலம் ஆட்களைத் தெரிவு செய்யும் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவைப் பாராட்டிய செனட்டர் எம் திருச்செல்வம் இராணுவத்துக்கு ஆட்களைத் திரட்டும் பொழுதும் இதே கம்பியூட்டர் முறையைப் பின்பற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

ஆயுதப்படைகளுக்கு ஆட்களைத் திரட்டும் பொழுது இதுவரைகாலமும் தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் புறக்கணிக்கப்பட்டுவந்திருக்கிறார்களென்றும் படைகளுக்கு திரட்டும் பொழுது ஜனவிகிதாசாரப்படி செய்ய வேண்டுமென்றும் செனட்டர் திருச்செல்வம் இன்று செனட்சபையில் கேட்டுக் கொண்டார். [சி பி எ]

## வடமாகாண ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அருணோதயாக் கல்லூரி வரணி மத்திய மகாவித்தியாலயம்

கீழ்ப்பிரிவு ஆண்கள்: அருணோதயாக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, வேவரையாளி இந்துக் கல்லூரி

மேற்பிரிவு பெண்கள் வட்: யாழ்ப்பாணக் கல்லூரி, காரைநகர் இந்துக்கல்லூரி, இராமநாதன் கல்லூரி

கீழ் பிரிவுபெண்கள் மெதடிஸ்ற் பெண்கள் உயர்கல்லூரி, இராமநாதன் கல்லூரி, விமன்காமம் மத்திய மகாவித்தியாலயம்.

### கட்டுரை

ஆங்கிலம் ஆண்கள்: எஸ் ஸ்ரீகாந்தா யாழ். மத்திய கல்லூரி, எஸ் அருள்நேசன் ஸ்கந்தா, வி சத்தியமூர்த்தி கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயம்.

பெண்கள் எஸ் வசந்தகுமாரி மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி,

தமிழ் ஆண்கள், வி திருச்செல்வம் யாழ் மத்திய கல்லூரி, வி விநாயகமூர்த்தி சாவகச்சேரி இந்துக்கல்லூரி, பி நடராஜசுந்தரம் ஹார்ட்லி, பெண்கள் எஸ் கல்யாணி மகாஜனா, கே விஜயலக்ஷ்மி வேலணை மத்திய மகாவித்தியாலயம், கே அன்னலக்ஷ்மி மகாஜனா.

## இன்று ஜி. ஸி. ஈ பரீட்சை: பலத்த பொலிஸ்காவலுடன்!

யாழ்ப்பாணம், ஞாயிறு நாடு பூராவும் இன்று ஜி. சி. ஈ. பரீட்சை ஆரம்பமாகும்போது பரீட்சை நிலையங்களை ஆயுதம் தாங்கிய பொலிஸ் கோஷ்டியினர் காவல் செய்வார்கள்.

பரீட்சை அதிகாரிகளின் வீடுகளிலும் ஆயுதம் தாங்கிய பொலிசார் இன்று முதல் காவல் செய்வார்கள். ஆயுதம்தாங்கிய பொலிஸ் கோஷ்டியினர் இன்று பரீட்சை நிலையத்தை சுற்றியுள்ள வட்டாரங்களில் ரோந்துசுற்றுவார்கள் தபால் நிலையங்களுக்கும் பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகளுக்கும், கச்சேரி உயர்தர அதிகாரிகளுக்கும், பரீட்சை நிலையங்களை பார்வையிட அதிகாரம்வழங்கப்பட்டுள்ளது.

## நிஜலிங்கப்ப ...

(1ம் பக்கதொடர்ச்சி)

மாநிலத்திலும் எந்தவொரு கட்சியும் இவ்வாறு எல்லாத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றதில்லை.

தலைநகரான புதுடில்லியில் 7 தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது.

கேரளத்தில் 19 லோக்சபா தொகுதிகளில் 16 இடங்களை முற்போக்குக் கூட்டணி கைப்பற்றியது. இங்கு கட்சிகளின் நிலைவரம் வருமாறு:

இந்திரா: 6. கேரளக் காங்கிரஸ்: 3: முஸ்லிம் லீக், 2, புரட்சிவாதிகள்: 3, கம்யூனிஸ்ட்: 3 மிகுதி ஏனையவர்கள்.

ஆந்திராவில் 41 தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் 28 இடங்களையும் தெலுங்கானா சமிதி 10 இடங்களையும் கம்யூனிஸ்ட்கட்சி 1 இடத்தையும் மார்ஸிய காங்கிரஸ் 1 இடத்தையும் சுயேச்சை ஒரு இடத்தையும் பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டில் லோகசபை தொகுதிகளுக்கான அதிகாரபூர்வமான முடிவுகள் வெளிவந்த தொகுதிகள் சில வருமாறு:-

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் தொகுதியில் தி. மு. க. இரா செழியன் வெற்றிபெற்றார். இவருக்கு 242547 வாக்குகள் கிடைத்தன இவரை எதிர்த்துப்போட்டியிட்ட நிஜலிங்கப்பா காங்கிரஸ்வேட்பாளருக்கு 203894 வாக்குகள் கிடைத்தன.

கோயம்புத்தூர் மாவட்டம் தாராபுரம்தொகுதியில் சி டி தண்டாயுதபாணி தி. மு க. வெற்றிபெற்றார்.

மேட்டூர் தொகுதியில் இந்திராகாங்கிரஸ் திரு. பூவராகன்வெற்றிபெற்றார் இவரை எதிர்த்துப் போட்டியிட்ட நிஜலிங்கப்பா காங்கிரஸ் வேட்பாளரைவிட இவர் 66140 வாக்குகள் கூடுதலாகப் பெற்றார்.

தஞ்சாவூர் மாவட்டம் மாயவரம்தொகுதியில் தி. மு க. சுப்பிரவேலு வெற்றிபெற்றார்.

பொள்ளாச்சித் தொகுதியில் தி.மு க நாராயணன் வெற்றிபெற்றார்

புதுச்சேரி தொகுதியில் இந்திரா காங்கிரஸ் திரு மோகன் குமாரமங்கலம் வெற்றிபெற்றார். இவருக்கு 112714 வாக்குகள் கிடைத்தன

அமெரிக்க தூதரக சம்பவம்:

## கொலையுண்ட இன்ஸ்பெக்டர் குடும்பத்துக்கு ரூ.50,000!

கொழும்பு, சனி கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரக தாக்குதல் சம்பவத்தில் கத்திக்குத்துக்கு இலக்காகி கொலையுண்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரி ஜி கருணரத்தினா குடும்பத்தினர் 50 ஆயிரம் ரூபாய் பெறுவார்.

இந்தத் தொகையில் 20 ஆயிரம் ரூபாயை பொலிஸ் இலாகா கருணரத்தினா குடும்பத்துக்கு வழங்கும். மிகுதி முப்பதினாயிரம் ரூபாய் இன்சூரன்ஸ் பணமாகக் கிடைக்க விருக்கிறது. அமெரிக்கத் தூதரகம் தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 7 பேரும் ரிமாண்டில் வைக்கப் பட்டுள்ளனர். நாளை அடையாள அணிவகுப்பு நடைபெறும் (சி பி ஏ)

## செனட்சபை தலைவர் ...

கொழும்பு, சனி அரசாங்கத்தின் முற்போக்கான நடவடிக்கைகளுக்கு செனட்சபை இடையூறாக இருப்பதாக சிலபொறுப்புள்ள அமைச்சர்களே கூறிவருவதுவருந்தத்தக்க தென்று செனட்சபைத் தலைவர் ... இன்று செனட்சபையில் ஒரு கட்டத்தில் தெரிவித்தார்.

## துரையப்பா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது

அல்பிரட் துரையப்பாவின் மோட்டார்கார் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டது சம்பந்தமாக தம்மையும்பொலிசார் விசாரணைசெய்ததாகவும் தாம் கொடுத்தவாக்குமூலத்தைத் தொடர்ந்தும் வேறு சிலர் கொடுத்த வாக்குமூலத்தின் மீதும் தம்மீது சந்தேகம் இல்லையென்றும் வீணாகச்சங்கடப் படுத்தியமைதன்னிக்குமாறும் பொலிசார் தம்மிடம் கேட்டுக்கொண்டதாக பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் திரு ரூபின்தம்பு தெரிவித்தார்

தமது கார் வெடிவைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவத்தைக் கேள்விப்பட்டுத் தம்மைச் சந்தித்த தமது அன்பர்களையும் ஆதரவாளர்களையும் அமைதியுடனிருக்குமாறும், பொலிசார் விசாரணைசெய்து வருகிறார்களென்றும் உண்மைவிரைவில் வெளியாகுமென்றும் தாம் கூறியிருப்பதாக திரு அல்பிரட் துரையப்பா நேற்றுத் தெரிவித்தார்.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" ... யாழ்ப்பாணம் ... 63-ம் இலக்கத்திலுள்ள ... அச்சகத்தில் 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் ... வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org